வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றும்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றும்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 21.10.2023 சனிக்கிழமை | இதழ் : 316 | பக்கங்கள் : 12

# வடக்கில் கடையடைப்பு மட்டுமே! பொதுமுடக்கம் நேற்று பிசுபிசுப்பு!!

## கிழக்கில் ஹர்த்தால் சோபிக்கவில்லை வீதிகளில் மக்கள் வழமைபோன்று நடமாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 21

**தமிழ்க் கட்சிகளின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நேற்று முன்னெடுக்கப்பட்ட ஹர்த்தால் பிசுபிசுத்துப்போனது. பிரதான நகரங்களில் பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தாலும் பொதுச் சேவைகள் இடம்பெற்றன. வீதிகளில் மக்கள் நடமாட்டம் வழமை போன்று இடம்பெற்றது.**



முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கோரியும், தமிழ்பேசும் மக்கள் மீதான அடக்குமுறைகளைக் கண்டித்தும் வடக்கு - கிழக்கில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்க 8 தமிழ்க் கட்சிகள் கூட்டாக அழைப்பு விடுத்திருந்திருந்தன. எனினும், ஹர்த்தால் போராட்டம் எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை.

வடக்கு - கிழக்கில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பிரதான நகரங்களில் பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தாலும் சுப்பர் மார்க்கெட்டுகள், மருந்தகங்கள் திறக்கப்பட்டிருந்தன.

வீதிகளில் பொது மக்களின் நடமாட்டம் வழமை போன்று காணப்பட்டது. அதேவேளை, வீதியோரங்களில் மரக்கறி வியாபாரம் களை கட்டியது.

11

## மூன்றாவது முறையாக உயர்ந்த மின் கட்டணம்!

கொழும்பு, ஒக். 21

மின்சார கட்டணத்தை 18 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு இலங்கை மின்சார சபைக்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய நேற்று வெள்ளிக்கிழமை முதல் இந்த அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஓராண்டில் மூன்றாவது முறையாக மின் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது.

13 நிபந்தனைகளின் அடிப்படையில் மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு அனுமதி

11

## வடபகுதிக்கான ரயில் நேர அட்டவணையில் மாற்றம்

கொழும்பு, ஒக். 21

வடபகுதிக்கான ரயில் நேர அட்டவணையில் இன்று முதல் மாற்றம் ஏற்படவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவிக்கின்றது.

அநுராதபுரம் முதல் மாகோ வரையான ரயில் தண்டவாளம் புனரமைக்கப்படவுள்ள நிலையிலேயே, ரயில் சேவைகள் மட்டுப்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், கல்கிஸ்ஸை முதல் காங்கேசன்துறை வரை செல்லும் ரயில் உள்ளடங்கலாக அனைத்து வடபகுதிக்குமான ரயில் நேர அட்டவணைகள் இன்று முதல் மாற்றப்படவுள்ளன.

11

## ஐ.நா. அமைப்புக்கள் பல் இல்லாத பாம்புகள்

### மனோ கணேசன் சாடல்

கொழும்பு, ஒக். 21

எந்தவொரு பிரச்னைக்கும் யுத்தம் ஒரு தீர்வு அல்ல எனவும் பிரச்னையின் மூலக்காரணம் கண்டறியப்பட வேண்டுமெனவும் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் வலியுறுத்தினார்.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் மனித உரிமைகள் பேரவை அனைத்தும் பல் அற்ற பாம்புகளாகவே காணப்படுகின்றன என்றும் அவர் கூறினார்.

இஸ்ரேல் - காஸா மோதலுக்கு அமைதியான முறையில் தீர்வு காண ஐக்கிய நாடுகள் சபையினை உடனடியாக தலையீடு செய்யுமாறு கோரிக்கை விடுக்கும் வகையில் பாராளுமன்றத்தில் ஒத்தி வைப்பு வேளை விவாதம் நடைபெற்றது.

இந்த விவாதத்தின் போது கருத்துரைக்கையிலே பாராளுமன்ற உறுப்பினர் மனோ

11

## இலங்கைக்கு இரண்டாம் தவணைக் கொடுப்பனவை வழங்க ஊழியர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டது

கொழும்பு, ஒக். 21

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கவுள்ள கடன் வசதியின் இரண்டாம் தவணைக் கொடுப்பனவை வழங்க ஊழியர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய, 330 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி, இரண்டாம் தவணைக் கொடுப்பனவாக இலங்கைக்கு கிடைக்கவுள்ளது.

அண்மையில், இலங்கைக்கு வருகை தந்த சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் கடன் வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பில் மீளாய்வினை மேற்கொண்டனர்.

இதற்கமைய, கடன்

11



## நாடு திரும்பினார் ஜனாதிபதி!

கொழும்பு, ஒக். 21

சீனாவுக்கான நான்கு நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு நேற்று வெள்ளிக்கிழமை திரும்பியுள்ளார்.

சீனாவில் நடைபெற்ற ஒரே மண்டலம் ஒரே பாதை திட்டத்தின் 3ஆவது சர்வதேச ஒத்துழைப்புக்கான மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடந்த 15ஆம் திகதி சீனாவுக்கு பயணமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் நடைபெற்ற யுத்தமும் பலஸ்தீனத்தில் நடப்பதும் ஒன்றுதான்!

### சபையில் கூறினார் சுமந்திரன் எம்.பி.

கொழும்பு, ஒக். 21

"இலங்கையில் நடந்த போரும், தற்போது இஸ்ரேல்-பாலஸ்தீனத்திற்கு இடையே இடம்பெற்று வரும் போரும் ஒன்றுதான்" என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல்- பாலஸ்தீனத்திற்கு இடையே இடம்பெற்று வரும் போர் குறித்து நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே சுமந்திரன் இவ்வாறு கூறினார்.

இது குறித்து

11

## டயனா கமகே மீது தாக்குதல்?

### அறிக்கை சமர்ப்பிக்குமாறு சபாநாயகர் பணிப்பு

கொழும்பு, ஒக். 21

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சுஜித் பெரேராவினால், பாராளுமன்றில் வைத்து நேற்று தான் தாக்கப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் டயனா கமகே சபையில் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக உடனடியாக விசாரணையொன்றை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

இந்த சர்ச்சை தொடர்பாக ஆராய்வதற்காக பிரதமரின் வேண்டுகோளுக்கு அமைவாக, சபை நடவடிக்கைகள் 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டன.

இதனையடுத்து இவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு

11

## மீண்டும் எங்கள் மீது கை வைத்தால் இன முரண்பாடுகள் தோற்றம் பெறும்

### சரத் வீரசேகர எச்சரிக்கை

கொழும்பு, 2ஒக். 21

விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டும் கொல்லப்பட்ட திவுல்பத்தான மக்கள் மீது மீண்டும் கை வைத்தால் தமிழ் - சிங்கள இன முரண்பாடு தோற்றம் பெறும் என சரத் வீரசேகர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர், ஒவ்வொரு இனத்திற்கும் ஒவ்வொரு பகுதி, நாட்டில் ஒதுக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- நாம் புலிகள்

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது

நீண்டநாட்களாக திட்டமிடப்பட்டு, ஏழு தமிழ் தேசியக் கட்சிகளின் கூட்டு ஏற்பாட்டில் நடைபெற்ற ஹர்த்தால் போராட்டம் 'வெற்றிகரமாக' நடந்து முடிந்திருக்கின்றது.

இந்தப் போராட்டம் குறித்து இந்தப் பத்தியில் நாம் பல தடவைகள் எமது எண்ணங்களையும் மக்களின் மன ஓட்டங்களையும் பிரதிபலித்திருக்கிறோம்.

நீதிபதி பதவியை விட்டு விலகி நாட்டைவிட்டு வெளியேறியதையடுத்து ஏழு தமிழ்க் தேசியக் கட்சிகள் போராட்டத்தை அறிவித்தன. முதலில் யாழ்ப்பாணத்தில் மனித சங்கிலிப்போராட்டம் நடத்துவது என்றும் பின்னர் முல்லைத்தீவை முடக்கும் போராட்டம் ஒன்றை நடத்துவது என்றும் முடிவெடுத்தன.

சுன்னாகம், மருதனார்மடத்திலிருந்து யாழ்ப்பாணம் வரையான சுமார் எட்டு கிலோ மீற்றர் தூரத்திற்கு மனித சங்கிலியை ஏற்படுத்தும் அளவிற்கு மக்கள் அதில் கலந்துகொள்ளவில்லை. அன்று இரவே தமது தவறை உணர்ந்த கட்சித் தலைவர்கள், 'மக்களை வரச்சொன்னால் வரமாட்டார்கள், ஆனால் வீடுகளில் இருங்கள் என்றால் இருப்பார்கள்' என்பதை உணர்ந்து கொண்டதால் 'வீடுகளுக்குள் மக்களை இருத்தும்' ஹர்த்தாலை நடத்துவது என்று முடிவெடுத்திருந்தனர்.

அப்போதும் கூட, இது போன்ற போராட்டங்களை நடத்துவது பற்றி கட்சித் தலைவர்கள் சிந்திக்க வேண்டும் என்று இந்தப் பத்தியில் கேட்டிருந்தோம்.

ஏற்கனவே இந்த ஹர்த்தாலை கடந்த பதின்மூன்றாம் திகதியே நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டிருந்தபோது, பதினைந்தாம் திகதி நடக்கவிருந்த புலமைப்பரிசில் பரீட்சையைச் சுட்டிக் காட்டியதுடன், அதனைத் தொடர்ந்து தவணைப்பரீட்சைகள் நடக்கவிருப்பது குறித்தும் இந்தப் பத்தியில் எழுதியிருந்தோம். அதன் பின்னர் கட்சித் தலைவர்கள் தமது போராட்டத்தை இருபதாம் திகதிக்கு மாற்றியிருந்தனர்.

தவணைப் பரீட்சையை ஒரு நாள் ஒத்திவைப்பதில் தவறு இருந்திருக்காதுதான். ஆனால் அதனை உரியமுறையில் பேசி அதற்கு ஏற்பாடு செய்வதற்கு யாரும் முயன்றதாக தெரியவில்லை. கட்சித் தலைவர் முடிவெடுத்துவிட்டார் என்பதற்காக கடைசி நேரத்தில், அரசியல் குழுவைக்கூட்டி ஆதரவு வழங்கிய தமிழரசின் அரசியல்குழுவில் இருந்த, முன்னாள் பாடசாலை அதிபரான நமது சிறிதரன் எம்.பி. கூட அதுபற்றி சிந்திக்கவில்லை என்பதும் கவனத்திற்குரியது.

நேற்று முன்தினம் மாகாணக் கல்விப்பணிப்பாளரிடம் வினவிய போது, வலயக் கல்விப் பணிப்பாளர்களை இதுவிடயத்தில் முடிவெடுக்க கேட்டிருப்பதாக கூறியிருந்தார். வலயக் கல்விப் பணிப்பாளர்களோ, தாங்கள் முடிவெடுக்காமல் பாடசாலை அதிபர்களை இதுவிடயத்தில் முடிவெடுக்க பணித்திருந்தனர்.

ஆக, நேற்று நடைபெறவிருந்த தவணைப்பரீட்சைகளை நடத்துவதா இல்லையா என்பதை மாகாணத்திலுள்ள பாடசாலைகளின் அதிபர்கள் முடிவெடுக்கவிருந்தனர்.

நாம் இந்தப் பத்தியில் தொடர்ந்து எழுதிவந்ததுபோல, இந்த ஹர்த்தால் மாணவர்களின் கல்விக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று ஒரு அதிபர் நினைத்து, தனது பாடசாலையில் ஒரு மாணவன் வந்திருந்தாலும் அவர் பரீட்சையை நடத்தியிருக்கலாம். அப்படி ஒரு பாடசாலையில் பரீட்சை நடந்திருந்தாலும் கூட, பின்னர் பரீட்சையை நடத்துவதற்காக புதிதாக வினாத்தாள்களை தயாரிக்க வேண்டிய நிலை வந்திருக்கும்.

எமது கவலை எல்லாம், இந்த ஏழு கட்சித் தலைவர்களும் பல தடவைகள் கூடி இந்த ஹர்த்தாலை எப்படி நடத்துவது என்று முன்னாயத்த கூட்டங்களை நடத்திக்கொண்டிருந்தபோது அதுகுறித்து ஒரு தீர்க்கமான முடிவை கல்வித்துறை சார்ந்தவர்களை அணுகி, எடுத்திருக்க முடியதா என்பதுதான்.

அவ்வாறு பரீட்சைக்கான மாற்று ஏற்பாடு எதனையும் செய்யாமலே, ஹர்த்தாலுக்கு முதல்நாள், 'ஹர்த்தால் கடைப்பிடிக்கப்படவுள்ளதால் பாடசாலை நடவடிக்கைகளை புறக்கணிக்கு மாறு' தமிழ் கட்சிகள் மாணவர்களை நோக்கி அழைப்பு விடுத்திருந்தும் கவனிக்கப்படவேண்டியது.

ஹர்த்தால் வெற்றிகரமாக நடந்ததா இல்லையா என்பது நாம் இங்கே எழுதித்தான் வாசகர்கள் தெரியவேண்டும் என்பதல்ல. ஆனால், இந்த ஹர்த்தாலை வெற்றிகரமாக நடத்திமுடிப்பதற்காக நமது தமிழ் தேசியக் கட்சித் தலைவர்கள் வழக்கத்திற்கும் மாறாக தீவிரமாக களப்பணி ஆற்றியிருக்கிறார்கள் என்பது பலருக்கும் மனநிறைவைத்தந்திருக்கும்.

ஒன்றிற்கு பலதடவை முன்னாயத்தக் கூட்டங்களை நடத்தினார்கள், வவுனியாவில் தலைவர்கள் மக்களின் ஆதரவைக்கோரும் துண்டுப்பிரசுரங்களை வீதிவீதியாக சென்று விநியோகித்தார்கள். ஒவ்வொரு நகரங்களாக சென்று வர்த்தக சமூகத்தையும், தனியார் பஸ் உரிமையாளர்களையும் முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கங்களையும் சந்தித்து ஆதரவு கேட்டார்கள்.

அவர்களின் முயற்சி வீண் போகவில்லை. வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டிருந்தன. தனியார் பஸ்சேவை நடைபெறவில்லை.

நேற்று நடைபெற்ற ஹர்த்தால் தலைவர்களைப் பொறுத்தவரை முழுவெற்றிதான். ஆனால் மக்கள் தான் ஹர்த்தாலை கண்டுகொள்ளவில்லை. வழக்கத்திற்கு மாறாகவே சில இடங்களில் மக்கள் நடமாட்டம் அதிகமாகவே இருந்தது.!

**-ஊர்க்குருவி.**

# வடக்கில் நேற்று நடைபெற்ற ஹர்த்தால்



ஈழநாடு
Eelanadu
21.10.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், ஐப்பசி 04

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஜனாதிபதியால் எதனையும் கட்டுப்படுத்த முடியாதா?

இலங்கையின் ஜனாதிபதி பதவியென்பது சக்திமிக்கது. காலஞ் சென்ற ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் வார்த்தையில் சொல்வதனால் - ஆணை பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாற்றுவதைத் தவிர, ஏனைய அனைத்தும் செய்யும் அதிகாரம் கொண்டது. அந்தக் கதிரையை எப்படியாவது கைப்பற்றிவிட வேண்டுமென்பதே பல சிங்கள அரசியல்வாதிகளது கனவாக இருக்கின்றது.

இந்த நிலையில் 2005இல், அந்தக் கதிரையை தொட்டுவிடுவதற்கான வாய்ப்புக்கள் இருந்தும், தமிழ் மக்களின் வாக்குகளை பெற முடியாத நிலையில் ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைந்தார். எனினும், பொருளாதார நெருக்கடியின் விளைவாகவும், அப்போதைய ஜனாதிபதியான கோட்டபய ராஜபக்ஷவின் இயலாமையினாலும் ரணிலின் நீண்டகால கனவு நிறைவேறியது. ஆனாலும் ஒரு குறையுண்டு. ரணில் எதிர்பார்த்தது போன்று, மக்களின் ஆதரவுடன் அந்தக் கதிரையை கைப்பற்ற முடியவில்லை. இந்த நிலையில் மக்களின் ஆதரவுடன் அந்தக் கதிரையில் அமர்ந்துவிட வேண்டுமென்னும் இலக்குடன் ரணில் காய்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றார்.

இந்த நிலையில் தமிழ் மக்களின் பிரச்னைகள் மீது கரிசனையுடன் இருப்பதாகவும் ரணில் அவ்வப்போது கூறிவருகின்றார். அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தப் போவதாக கூறினார். தொல்பொருள் திணைக்களத்தின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கான உத்தரவுகளை வழங்கினார். அண்மையில் மட்டக்களப்பு மேய்ச்சல் தரை விவகாரத்தின் வெளி மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கு வேறு இடங்களில் காணிகளை வழங்குமாறு உத்தரவிட்டிருந்தார். ஆனால், எந்தவொரு விடயமும் நடைமுறைக்கு வரவில்லை. இந்த நிலையில் ரணிலின் உத்தரவுகளை பரிகசிக்கும் வகையில், அப்பகுதியில் முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநரின் உதவியுடன், புத்தர் சிலையொன்று வைக்கப்பட்டிருக்கின்றது. அதே வேளை, மேய்ச்சல் தரை விவகாரத்தில் ரணிலின் உத்தரவுகள் ஒரு பொருட்டாகவும் எடுத்துக் கொள்ளப்படவில்லையென்றும் கூறப்படுகின்றது. இந்த அடிப்படையில் நோக்கினால், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிடுவது போன்று, ஜனாதிபதி ரணிலின் உத்தரவுகள் எதுவுமே கிழக்கில் பொருட்படுத்தப்படுவதில்லை போன்றதொரு சூழலே தெரிகின்றது.

ஒரு வேளை நாடாளுமன்றத்தில் ரணிலுக்கான ஆதரவின்மையால்தான் இவ்வாறு நடக்கின்றதா? இதற்கு ஆமென்னும் பதில் கிடைக்குமாயின், ஒரு வேளை ரணில் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றாலும் கூட, நாடாளுமன்றத்தில் பலமில்லாது போனால், அவரால் எதனையும் செய்ய முடியாதல்லவா!

நிலைமைகளை அவதானிக்கும் போது, ரணில் குறிப்பிட்டவாறு எந்தவொரு விடயமும் நடைபெறவில்லை. ஆனால் தன்னால்தான் நாடு மீண்டுவருவதான ஒரு கதையை சொல்லிவருகின்றார். பொருளாதார நிலைமை ஓரளவு மீட்சிபெற்றமைக்கு, ரணில் ஒரு காரணம்தான். ஆனால் ரணிலின் உத்தரவுகள் எவையுமே நடைமுறைக்கு வரவில்லையென்பது தமிழ் மக்களை பொறுத்தவரையில் சிக்கலானது. வெறும் நம்பிக்கைகளில் தனிப்பட்டவர்களுடனான உறவினடிப்படையில் தமிழ் கட்சிகள் செயல்பட முடியாதென்பதையே இந்த நிலைமை எடுத்துரைக்கின்றது.

# இலங்கைக்கு எப்போதும் சீனா ஆதரவு!

## ரணிலிடம் கூறினார் அந்நாட்டு துணைப் பிரதமர்

கொழும்பு, ஒக். 21

சீனாவுடன் இறப்பர் அரிசி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் மூலம் இலங்கை, தங்களுக்கு வழங்கிய ஆதரவை சீன மக்கள் ஒருபோதும் மறந்து விடமாட்டார்கள் என சீன துணைப் பிரதமர் டிங் ஷீசியான் தெரிவித்தார்.

அத்துடன் சீனா இலங்கைக்கு தமது ஆதரவை எப்போதும் வழங்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் சீன துணைப் பிரதமருக்கும் இடையில் பீஜிங் நகரில் இடம்பெற்ற, இருதரப்பு பேச்சுவார்த்தையின்போதே சீன துணைப் பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"பெல்ட் அண்ட் ரோட்" முன்னெடுப்புத் திட்டத்தின் கீழ் கொழும்பு துறைமுக நகரம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாகத் தெரிவித்த சீன துணைப் பிரதமர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் இரண்டு திட்டங்களும் வெற்றிகரமாக நிறைவு செய்யப்படும் என நம்பிக்கை தெரிவித்தார்.

இந்த நிலையில் சீன-இலங்கை இறப்பர் அரிசி ஒப்பந்தம் இலங்கை செய்து கொண்ட முதலாவது வெளிநாட்டு வர்த்தக உடன்படிக்கை என்பதை நினைவு கூர்ந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இரு நாடுகளினதும் பொதுவான கொள்கைகளுக்கு அமைவாக புதிய வர்த்தக உறவுகளை மேம்படுத்த வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியின்போது, சீனா வழங்கிய ஆதரவை பெரிதும் பாராட்டுவதாகத் தெரிவித்த ஜனாதிபதி, இலங்கை - சீன நட்புறவு கடந்த காலத்திலிருந்து வலுவான மட்டத்தில் இருந்ததாகவும், குறிப்பிட்டார்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் அடையாளத்தையும் அமைதியையும் பாதுகாப்பதில் இலங்கை மிகுந்த கவனம் செலுத்துவதாகவும், இந்து சமுத்திரம் அதிகாரப் போட்டிக்கு பலியாவதற்கு இடமளிக்கக்கூடாது எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

சீனாவுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்வதே இலங்கையின் எதிர்பார்ப்பாகும்.

அதேபோல், பிராந்திய பொருளாதார உறவுகளுக்கான அமைப்பில் அங்கத்துவம் பெறுவதற்கு இலங்கை முயற்சிப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (அ)

# வைத்தியசாலையிலிருந்து திரும்பும்போது பஸ்ஸில் உயிரிழந்த 2 பிள்ளைகளின் தந்தை

கொழும்பு, ஒக். 21

கண்டி போதனா வைத்தியசாலையில் கிளினிக்குக்குச் சென்றுவிட்டு பேருந்தில் வீடு திரும்பிக்கொண்டிருந்த இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் பேருந்திலேயே உயிரிழந்துள்ளார்.

டிக்கோயா படல்கல மேல் பகுதியை சேர்ந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் முச்சக்கரவண்டிச் சாரதி என்பதுடன், தொற்று அல்லாத நோய்க்காக மாதம் ஒருமுறை கண்டி போதனா வைத்தியசாலைக்குச் செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர் நேற்று முன்தினம் வீட்டிலிருந்து புறப்பட்டு சென்றுள்ளார். மருத்துவமனைக்கு சென்றுவிட்டு, நேற்று காலை ஹற்றனில் இருந்து பொடைஸ் நோக்கி பயணிக்கும் தனியார் பேருந்தில் வீட்டுக்கு சென்றுகொண்டிருந்தபோது உயிரிழந்துள்ளார்.

இவர் பேருந்தில் இருந்து இறங்காததால் சந்தேகமடைந்த மற்ற பயணிகள் இது குறித்து சாரதி மற்றும் நடத்துநரிடம் தெரிவித்ததையடுத்து அவர் உயிரிழந்தமை உறுதி செய்யப்பட்டது.

உயிரிழந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையின் சடலம் அதே பேருந்தில் டிக்கோயா ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

சம்பவம் தொடர்பில் ஹற்றன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# தேர்தல் தொகுதி மறுசீரமைப்பு; இராஜாங்க அமைச்சர் சந்தேகம்!

கொழும்பு, ஒக். 21


நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவினால் முன்மொழியப்பட்டுள்ள புதிய தேர்தல் தொகுதி மறுசீரமைப்பு யோசனையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள், மலையக பிரதிநிதித்துவத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் ஏ.அரவிந்தக்குமார் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற குழு அறையில், பிரதமர் தினேஸ் குணவர்தன தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தின்போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

தொகுதி வாரியாக 160 உறுப்பினர்களும், விகிதாசார அடிப்படையில் 65 உறுப்பினர்களும் பாராளுமன்றத்துக்கு தெரிவாவதற்கான வரைவு ஒன்றை, நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ முன்வைத்துள்ளார்.

இது மலையக பிரதிநிதித்துவத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஏ. அரவிந்த் குமார் கூறினார். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






ஒக்ரோபர் - 21 சனிக்கிழமை
சோபகிருது வருடம் - ஐப்பசி 04
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : சப்தமி

**மேடம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள். உற்சாகமான நாள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கடகம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். அமோகமான நாள்.

**சிம்மம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும்.வேற்று மதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**கன்னி**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒருவேலை முடியும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். திருப்தி உண்டாகும். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

**துலாம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. சக ஊழியர்களால் நினைத்தை முடிப்பீர்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். இனிமையான நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்க வேண்டிய நாள்.

**மகரம்**
குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் கனிவாகப் பழகுங்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். பயணங்களால் புத்துணர்ச்சி பெறுவீர்கள். புது தொழில் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். நன்மை நடக்கும் நாள்.

**மீனம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். சாதிக்கும் நாள்.

# மானாமதுரை அருகே மாற்று இடம் கேட்ட இலங்கை தமிழர்

## மின் இணைப்பை துண்டித்து வெளியேற்றம்

மானாமதுரை, ஒக். 21

**சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அருகே மாற்று இடம் கேட்டு இலங்கை தமிழர்கள் வெளியேற மறுத்த நிலையில், மின் இணைப்பை துண்டித்து அவர்களை வெளியேற்றியதாக முறைப்பாடு எழுந்துள்ளது.**

இலங்கை தமிழர் முகாம்களில் ஊரக வளர்ச்சித் துறை சார்பில், தலா ரூ.5 லட்சத்தில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றன. அதன்படி, மானாமதுரை அருகே மூங்கில் ஊருணி முகாமில் 188 குடும்பங்கள் உள்ளன. முதல் கட்டமாக, 52 வீடுகள் கட்ட முடிவு செய்யப்பட்டு, கடந்த ஏப்ரல் மாதம் அந்த குடும்பங்களை அதிகாரிகள் வெளியேற்றினர். மேலும், அவர்கள் குடியிருந்த பழைய வீடுகளும் இடிக்கப்பட்டன.

அதையடுத்து, அவர்கள் ஆங்காங்கே வாடகை வீடுகளில் குடியிருந்து வருகின்றனர். மேலும், அவர்களுக்கு புதிய வீடுகள் கட்டுவதில் தாமதம் ஏற்பட்டது. இதையடுத்து, பாதிக்கப்பட்டோர் மாவட்ட ஆட்சியரிடம் புகார் தெரிவித்தனர். இந்நிலையில், மற்ற வீடுகளையும் இடித்து விட்டு மொத்தமாக 188 வீடுகள் கட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர். இதற்காக வீடுகளை விட்டு வெளியேறுமாறு தொடர்ந்து வலியுறுத்தினர்.

ஆனால், ஏற்கெனவே வெளியேறிய 52 குடும்பங்களுக்கு ஏற்பட்ட சிரமம் தங்களுக்கும் ஏற்படும் எனக் கருதி வெளியேற மறுத்துவிட்டனர். மேலும், மாற்று இடத்துக்கு ஏற்பாடு செய்து கொடுத்தால்தான் வெளியேறுவதாக தெரிவித்தனர். இதனிடையே, வீடுகளுக்கான மின் இணைப்பை துண்டித்து தங்களை வெளியேற்றியதாக, இலங்கை தமிழர்கள் புகார் தெரிவித்தனர்.

இது குறித்து இலங்கை தமிழர்கள் சிலர் கூறுகையில், 'ஏற்கெனவே வெளியேறிய 52 குடும்பத்தினர் வாடகை வீட்டில் வசிக்கின்றனர். எங்களுக்கு அருகில் வாடகை வீடுகள் கிடைக்கவில்லை. இதனால் மாற்று இடம் ஏற்பாடு செய்து கொடுத்தால் குடிசை அமைத்து தங்க தயாராக உள்ளோம். ஆனால், எங்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றிவிட்டனர்' என்று கூறினர்.

இது குறித்து வருவாய்த் துறை அதிகாரிகள் கூறுகையில். 'அருகிலேயே அவர்களை தங்க வைக்க அரசு இடம் கிடையாது. இதனால் அவர்களை வெளியேற்றும் நிலை ஏற்பட்டது. வீடுகளை விரைந்து கட்டி முடிக்க ஒப்பந்ததாரரிடம் கூறியுள்ளோம்' என்றனர். (அ)

# காவல்துறையினருக்கு போதிய ஊதியம் வழங்காதது துரோகம்

## தமிழக அரசு மீது அன்புமணி காட்டம்

சென்னை, ஒக். 21

காவலர்களின் ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும் என்று பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியிருக்கிறார். காவல் துறையினருக்கு போதிய ஊதியம் வழங்காதது துரோகம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்-

இந்தியாவின் பிற மாநிலங்களில் வழங்கப்படுவதற்கு இணையாக தங்களின் ஊதியத்தையும் உயர்த்தி வழங்க வேண்டும் என்று பல ஆண்டுகளாக தமிழக காவல் துறையினர் வலியுறுத்தி வரும் நிலையில், அவர்களின் எந்தக் கோரிக்கையையும் தமிழக அரசு இதுவரை நிறைவேற்றாதது ஏமாற்றம் அளிக்கிறது. நாட்டைக் காக்கும் காவலர்களின் கோரிக்கையை ஏற்க அரசு மறுப்பது பெரும் நம்பிக்கை துரோகமாகும்.

ஒப்பீட்டளவில் காவலர்களுக்கு குறைவான ஊதியம் வழங்கும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.



இந்த ஊதிய முரண்பாட்டைக் களைய வேண்டும் காவலர்களுக்கான குறைந்தபட்சக் கல்வித்தகுதி 10-ஆம் வகுப்பு என்பதால், அதை அடிப்படைத் தகுதியாகக் கொண்ட பணிகளுக்கு வழங்கப்படும் ஊதியத்தை காவலர்களுக்கும் வழங்க வேண்டும்.

என்று பல ஆண்டுகளாக காவலர்கள் கோருகின்றனர்.

தி.மு.க ஆட்சிக்கு வந்தால் இந்த கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்று சட்டப்பேரவைத் தேர்தலின்போது வாய்மொழியாக வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆனால், தி.மு.க ஆட்சிக்கு வந்து இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாகியும் இந்தக் கோரிக்கை ஆய்வுக்குக் கூட எடுக்கப்படவில்லை.காவலர்களுக்கு வழக்கமாக வழங்கப்பட வேண்டிய பயணப்படி, மிகை நேரப்படி ஆகியவை கடந்த 3 மாதங்களாக பல மாவட்டங்களில் வழங்கப்படவில்லை.

25 ஆயிரத்திற்கும் கூடுதலான காவலர்களுக்கு அடையாள அட்டை, செல்பேசிக்கான சிம் ஆகியவை இன்னும் வழங்கப்படவில்லை. காவலர்களுக்கு வார விடுப்பு வழங்கப்படுவதாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்தாலும் கூட பல மாவட்டங்களில் அது நடைமுறையில் இல்லை. காவல் துறையில் உள்ள காலிப்பணியிடங்கள் நிரப்பப்படாததால், அவர்களின் பணிச்சுமை அதிகரித்திருக்கும் நிலையில், அவர்களுக்கு விடுமுறையும் வழங்கப்படாததால், அவர்கள் குடும்பத்துடன் நேரத்தை செலவிட முடியாமலும், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளின் முக்கிய நிகழ்வுகளில் கலந்து கொள்ள முடியாமலும் கடுமையான மன உளைச்சலுக்கு ஆளாகி வருகின்றனர்-என்றுள்ளது. (அ)

# இளையராஜாவின் இசை நிகழ்ச்சி ரத்து

புதுச்சேரி, ஒக். 21

புதுச்சேரியில் இன்று நடைபெற இருந்த இளையராஜாவின் இசை நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் ஊடகங்களுக்கு அளித்துள்ள தகவலில், "புதுச்சேரி மக்களின் நீண்டநாள் கனவு விருப்பமான, இளையராஜாவின் இன்னிசை கச்சேரி நிகழ்ச்சியை, புதுச்சேரியில் நடத்த ஏற்பாடு செய்ததில் பெரு மகிழ்ச்சி அடைந்தோம்.

சில தவிர்க்க முடியாத காரணங்களால், புதுச்சேரியின் சுற்றுலா வளர்ச்சிக்கும் மாபெரும் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு தடையாக அமைந்துள்ள சில வழக்குகளாலும் இந்த இசை நிகழ்ச்சியை குறித்த தேதியில் நடத்த முடியாமல் போனதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்" என்று குறிப்பிட்டுள்ளனர்.

(அ)

# தேர்தல் முறைமையில் மாற்றம் 9 பேர் அடங்கிய குழு நியமனம்

கொழும்பு, ஒக். 21

**தேர்தல் முறைமையை மாற்றுவது தொடர்பில் ஆலோசனை முன்வைப்பதற்காக 09 பேர் அடங்கிய ஆணைக்குழு வொன்றை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.**

**அக்குழுவின் தலைவராக முன்னாள் நீதியரசர் ஜனாதிபதி சட்டத்தரணி பிரியசாத் ஜெரார்ட் டெப் நியமிக்கப்பட்டுள்ளார்.**

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய கடந்த 16ஆம் திகதி ஜனாதிபதியின் செயலாளர் எஸ்.பீ.ஏக்கநாயக்க வினால் வெளியிடப்பட்டுள்ளது.

குழுவின் உறுப்பினர்களாக சுந்தரம் அருமைநாயகம், சேனாநாயக்க அலி சென்றி லாகே, ஜனாதிபதி சட்டத்தரணி நளின் ஜயந்த அபேசேகர,அஹமட் ரஜித நவீன் கிரிஸ்டோபர், லெப்பே மொஹொமட் சலீம், சாகரிகா தெல்கொட, எஸ்தர் சிறியாணி நிமல்கா பெர்னாண்டோ மற்றும் விதாரணகே தீபானி சமந்த ரொட்ரிகோ ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், இந்த வர்த்தமானியினூடாக பெண்கள் மற்றும் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல், தேர்தல் அறிவிக்கப்பட்ட திகதி முதல் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் திகதி வரையான காலத்தை குறைத்தல், வாக்கெடுப்பின்போது அச்சிடப்பட்ட வாக்குச்சீட்டுகளுக்கு பதிலாக நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இலத்திரனியல் வாக்குகளை பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்குதல், வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் வாக்களிக்கக் கூடிய வாய்ப்பு, நபரொருவர் இரண்டு வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கும் அவ்வாறு தெரிவு செய்யும் பட்சத்தில் ஒரே நேரத்தில் சம்பந்தப்பட்ட இரு சபைகளையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும் வாய்ப்பை வழங்குதல், அரசியல் கட்சிகள் ஊடகங்களை பயன்படுத்தும் முறை தொடர்பில் ஊடக விதிமுறைகளை உருவாக்குதல், தேர்தலில் போட்டியிடுபவர்கள் செயற்படும் விதம், அரசியல் கட்சிகளை பதிவு செய்தல், நம்பிக்கையை கட்டியெழுப்புதல் போன்ற விடயங்கள் தொடர்பான சட்டதிட்டங்களை பலப்படுத்துதல் ஆகிய பிரதான விடயங்கள் குறித்து இந்த குழு ஆலோசனை முன்வைக்கும். (அ)

# ஜனக ரத்நாயக்க விவகாரம்: விசாரணை சி.ஐ.டிக்கு மாற்றம்!

கொழும்பு, ஒக். 21

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்கவுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்து கப்பம் பெறப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணை, கொழும்பு குற்றவியல் விசாரணை பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளது.

தமக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாக கடந்த 16ஆம் திகதி ஜனக ரத்நாயக்கவினால் கிருலப்பனை பொலிஸில் முறைப்பாடளிக்கப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாட்டுக்கு அமைய குறித்த சம்பவம் தொடர்பான விசாரணை கொழும்பு குற்றவியல் விசாரணை பிரிவினருக்கு மாற்றப்பட்டுள்ளது.

டுபாயில் மறைந்திருந்து திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் சந்தேகநபரான புளுமெண்டல் சங்கா என்பவரின் தரப்பினரால் தமக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக அவர் முறைப்பாடளித்துள்ளார்.

தம்மை கொலை செய்வதற்காக மற்றுமொரு தரப்பினர், 80 இலட்சம் ரூபாய் பணம் வழங்குவதாக உறுதியளித்துள்ளதாக குறித்த நபர் தம்மிடம் குறிப்பிட்டதாக ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, தம்மை கொலை செய்யாதிருப்பதற்கு 15 இலட்சம் ரூபாய் கப்பம் வழங்குமாறு தொலைபேசி ஊடாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க தமது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார். (அ)

# சவுதியில் உயிரிழந்த இலங்கை பணிப்பெண்

கொழும்பு, ஒக். 21

சவூதியின் ரியாத் நகருக்கு பணிப்பெண்ணாக சென்ற பெண் ஒருவர் மூன்று மாதங்களுக்கு முன்னர் உயிரிழந்துள்ளதாக கடந்த 17ஆம் திகதி கிராம சேவகர் ஊடாக குடும்பத்துக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

ஹொரணை, மதுரவல, அங்குருவத்தோட்டையில் வசிக்கும் 32 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தாயான ஹிருஷிகா சண்டமாலி என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்த பெண் வெளிநாட்டு வேலைக்காக சவூதி அரேபியா சென்றிருந்தவேளையில் மூன்று மாதங்களுக்கு முன்னர் இறந்துவிட்டதாக அவரது உறவினர்களுக்கு கடந்த 17ஆம் திகதி கிராமசேவகர் தெரிவித்தார்.

குடும்ப வறுமை காரணமாக மருதானையில் உள்ள தனியார் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் மூலம் சட்டபூர்வமாக பதிவு செய்துவிட்டு 6.2.2021 அன்று வெளிநாட்டு வேலைக்காக அவர் சவூதி அரேபியா சென்றுள்ளார்.

சுமார் ஒரு வருடம் ஏழு மாதங்களாக ரியாத்தில் உள்ள ஒரு வீட்டில் பணிப்பெண்ணாக பணிபுரிந்து வரும் இவர், கடந்த ஜனவரி 18ஆம் திகதி முதல் வீட்டுக்கு தொலைபேசி அழைப்பு ஏற்படுத்தவில்லை.

முன்னரும் சில சமயங்களில் அவர் இவ்வாறு நீண்டகாலம் தொலைபேசி அழைப்பு ஏற்படுத்தாமல் இருந்ததால், இம்முறையும் குடும்பத்தினர் சந்தேகமடையவில்லை.

நீண்ட காலமாக தொலைபேசி அழைப்பு கிடைக்காததால், தமது பகுதி கிராமசேவகரை தொடர்பு கொண்டு தகவல் வழங்கியுள்ளனர். வெளிவிவகார அமைச்சின் தொலைபேசி இலக்கத்தை கொடுத்து அதுபற்றி விசாரிக்குமாறு கிராமசேவகர் கூறியுள்ளார்.

பெண்ணின் கணவர் மறுநாள் தொலைபேசி எண்ணுக்கு அழைத்தபோது, இது குறித்து தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திடம் விசாரிக்குமாறும் கூறியுள்ளனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தை தொடர்பு கொண்ட பின்னர், அந்தப் பெண் 3 மாதங்களுக்கு முன்னர் இறந்துவிட்டார் என்ற செய்தி 2 நாட்களுக்கு முன்னர் அவர்களுக்கு கிடைத்துள்ளது.

பின்னர், மனைவியை வெளிநாடு அனுப்பிய மருதானையில் உள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்திடம் கணவர் பேசியபோது, அவர்களும் தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும், இந்த சம்பவத்தை ஊடகங்களுக்கு தெரிவிக்க வேண்டாம் என்றும் தெரிவித்தனர்.

பின்னர் உயிரிழந்த பெண்ணின் கணவர் நேற்று முன்தினம் வெளிவிவகார அமைச்சுக்கு சென்றதாகவும், மனைவியின் கடவுச்சீட்டிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், சடலத்தை இலங்கைக்கு கொண்டு வருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (அ)



சீனாவில் வெள்ளை குதிரை விகாரை வளாகத்தில்

# இலங்கை விகாரை மண்டப நிர்மாண பணிகள் மீண்டும்!

கொழும்பு, ஒக். 21

சீனாவின் முதல் பௌத்த விகாரையாக கருதப்படும் ஹினன் மாகாணத்தில் உள்ள "வெள்ளை குதிரை " (சுது துரங்க) விகாரை வளாகத்தில் இலங்கை பாரம்பரிய கட்டடக்கலை அம்சங்களைப் பிரதிபலிக்கும் வகையில் விகாரை மற்றும் ஸ்தூபி அமைக்கும் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பீஜிங்கில் "வெள்ளை குதிரை" விகாரையின் விகாராதிபதி வண. யின் லீ தேரர் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கிடையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமராக இருந்த காலத்தில் "வெள்ளை குதிரை " விகாரை வளாகத்தில் இலங்கை விகாரை மண்டப நிர்மாணப் பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கு அப்போதைய சபாநாயகர் கரு ஜயசூரியவினால் அடிக்கல் நடப்பட்டது.

ஆனால், அதன் பின்னர் அதன் பணிகள் மேற்கொள்ளப்படாத நிலையில் மீண்டும் அந்தப் பணிகளை ஆரம்பிக்குமாறும், விகாரை மண்டபத் திட்டங்களை புதிதாக தயாரிக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

பாஹியன் பிக்குவினால் இலங்கையிலிருந்து சீனாவிற்கு கொண்டு வரப்பட்ட பௌத்த பாலி நூல்களின் பிரதிகளை இந்த விகாரையில் வைப்பதற்காக இந்த விகாரை மண்டபம் இலங்கையினால் வழங்கப்படவுள்ளதாக ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார். (அ)

# ஐந்து வயது குழந்தை விபத்தில் உயிரிழப்பு!

கொழும்பு, ஒக். 21

நுரைச்சோலை தேவாலயத்துக்கு முன்பாக உள்ள பாதசாரிக் கடவையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் ஐந்து வயது குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

மோட்டார் சைக்கிள் ஒன்றும் கப் ரக வாகனமும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஐந்து வயது குழந்தையே உயிரிழந்துள்ளதாக நுரைச்சோலை பொலிஸார் கூறினர்.

இந்த விபத்தில் படுகாயமடைந்த இருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# சுற்றுலாத்துறை வருமானம் 97.5 வீதத்தினால் அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 21

இந்த ஆண்டின் முதல் 9 மாதங்களில் நாட்டின் சுற்றுலாத்துறை வருமானம் கடந்த ஆண்டை விட 97.5 வீதத்தினால் அதிகரித்துள்ளது.

இந்த வருடத்தின் வருமானம் 478.7 பில்லியன் ரூபா என இலங்கை மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த ஆண்டின் முதல் 9 மாதங்களில் நாட்டின் சுற்றுலா வருமானம் 242.4 பில்லியன் ரூபாவாக பதிவாகியது. (அ)

# யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் பயணிகள் வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை

கொழும்பு, ஒக். 21

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் பயணிகள் வசதிகளை குறிப்பிடத்தக்க வகையில் மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

குறித்த நடவடிக்கைக்காக 200 மில்லியன் ரூபாய் வரையில் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேச மற்றும் உள்நாட்டு விமானப் பயணத்திற்கான தேவைகள் அதிகரித்து வரும் நிலையில் குறித்த மேம்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இதனை குறிப்பிட்டார். (அ)

# இஸ்ரேல்-பலஸ்தீனப் போரை நிறுத்த சகல நாடுகளும் அணி திரளவேண்டும்

## நாமல் ராஜபக்ஷ எம்.பி அழைப்பு

கொழும்பு, ஒக். 21

“இஸ்ரேல் - பலஸ்தீன போரை முடிவுக்கு கொண்டுவர அனைத்துலக நாடுகள் ஓரணியில் திரள வேண்டும்“.

-இவ்வாறு பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இஸ்ரேல் - பலஸ்தீன போர் விவகாரம் தொடர்பில் நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

“எமது நாட்டில் 30 வருட காலம் யுத்தம் இடம்பெற்றது. யுத்தம் மற்றும் யுத்தத்தால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து எமது மக்களுக்கு நன்கு அனுபவம் உள்ளது.

தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதத்தால் பாரிய பாதிப்புகளுக்கு முகங்கொடுத்துள்ளோம். எந்தவொரு நாட்டிலும் பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதம் இடம்பெறுமானாலும் அதற்கு நாம் கடும் எதிர்ப்பை வெளியிடுகிறோம்.

1967ஆம் ஆண்டு இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன எல்லைகள் தொடர்பில் ஐ.நாவில் சில இணக்கப்பாடுகள் எட்டப்பட்டிருந்தன. ஆகவே, இருதரப்பினருக்கும் இடம்பெற்றுவரும் யுத்தத்தை நாம் முடிவுக்கு கொண்டுவர வேண்டும்.

பாதிக்கப்படும் அப்பாவி மக்களை காப்பற்ற வேண்டிய பொறுப்பு அனைத்துலக சமூகத்திற்கு உள்ளது. பல உயிர்கள் இருதரப்பிலும் இழக்கப்பட்டுள்ளன. ஐ.நாவில் எல்லைகள் தொடர்பில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டின் பிரகாரம் இருதரப்பினரும் செயல்பட வேண்டும்.

பலஸ்தீனத்துடன் எனது தந்தை மகிந்த ராஜபக்ஷவுக்கும் எமது குடும்பத்துக்கும் நெருங்கிய தொடர்புள்ளது. மகிந்த ராஜபக்ஷதான் பலஸ்தீன-இலங்கை நட்புறவுச் சங்கத்தை உருவாக்கியிருந்தார். யுத்தம் காரணமாக பலஸ்தீன மக்களுக்கு சில அசாதாரணங்கள் இடம்பெறுகின்றன. அதனால், அவர்களுக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும்.

பலஸ்தீனத்தில் வீதியொன்றுக்கு மகிந்த ராஜபக்ஷவின் பெயர் வைக்கப்பட்டுள்ளது. உலகில் எந்தவொரு நாட்டிலும் வேறு நாட்டின் தலைவரின் பெயரை வைப்பதில்லை. அந்த கௌரவத்தை பலஸ்தீனம் மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கியுள்ளது.

யுத்தம் மத்திய கிழக்கு நாடுகளை மையப்படுத்தி ஆரம்பித்தாலும் உலகில் அது ஏனைய நாடுகளுக்கும் பாதிப்பு ஏற்படும். உக்ரைன் - ரஷ்ய போரால் உலக பொருளாராத்துக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளதை நாம் பார்க்கிறோம். ஆகவே, இஸ்ரேல் - பலஸ்தீன போரால் அவ்வாறானதொரு நிலையே ஏற்படும்.

இஸ்ரேல் - காஸா விவகாரம் பல ஆண்டுகளாக தொடர்கிறது. எப்போதாவது பாரிய போர் வெடிக்கும் நிலைமையே காணப்பட்டது. இவ்வாறான நெருக்கடியான நிலைமையின் போது எமது நாட்டு பொருளாதாரத்தன்கு ஏற்பட போகும் அபாயங்கள் குறித்தும் முன்னெச்சரிக்கையாக செயல்பட வேண்டும்-என்றார். (அ)

# 2016 ஆம் ஆண்டு சுட்டுக்கொல்லப்பட்ட இரண்டு மாணவர்களின் நினைவேந்தல்!

## யாழ்.பல்கலைக்கழகத்தில் அனுஷ்டிப்பு



யாழ்ப்பாணம், ஒக். 21

கடந்த 2016 ஆம் ஆண்டு சுட்டு படுகொலை செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களான கஜன், சுலக்சன் ஆகியோரது 7ஆம் ஆண்டு நினைவேந்தல் யாழ் பல்கலைக்கழக கலைப்பீட வளாகத்தில் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினால் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது, யாழ் பல்கலைக்கழக மாணவர்களால், அவர்களின் நினைவுருவ படத்துகு மலரஞ்சலி செலுத்தி ஈகச்சுடரேற்றி அகவணக்கம் செலுத்தப்பட்டது.

தொடர்ச்சியாக கலைப்பீட மாணவர் ஒன்றிய தலைவர் நெவில்குமாரினால் நினைவுப் பேருரையும் ஆற்றப்பட்டது.

இதில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் அழகராசா விஜயகுமார், கலைப்பீட மாணவர் ஒன்றிய தலைவர் நெவில்குமார், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# உணர்வுபூர்வமான பிரச்னைகளையும் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க முடியும்

## சீனாவில் அமைச்சர் டக்ளஸ் எடுத்துரைப்பு

பீஜிங், ஒக். 21

காலாவதியான பூகோள அரசியல் தந்திரங்களை புறந்தள்ளி விட்டு முரண்பாடுகளற்ற பேச்சுவாரத்தைகள் ஊடாகவே பிரச்சினைகளுக்கான தீர்வினை காணவேண்டும் என்ற சீன ஜனாதிபதி சீ ஜின்பிங்கின் கருத்துக்கள் தன்னை கவர்ந்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மேலும், உணர்வுபூர்வமான பிரச்னைகளையும் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்ள முடியும் என்ற சீன ஜனாதிபதியின் கருத்தினை நிரூபிக்கும் வகையில் தன்னுடைய அரசியல் பயணம் அமைந்துள்ளதாகவும், குறித்த நம்பிக்கையுடனேயே ஜனநாயக நீரோட்டதில் இணைந்து கொண்டு தொடர்ச்சியாக நாடாளுமன்ற உறுப்பினராகவும் தற்போதைய அரசாங்கத்தில் சிரேஷ்ட அமைச்சர்களுள் ஒருவராகவும் பணியாற்றி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

சீனாவில் இடம்பெற்ற கடலசார் ஒத்துழைப்பிற்கான கருப்பொருள் எனும் தொணிப் பொருளில் கடந்த 18 ஆம் திகதி சீனாவில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பெல்ட் அன் றோட் எனப்படும் சீனாவினால் உருவாக்கப்பட்டு வருகின்ற சர்வதேச தொடர்பாடல்

முயற்சியின் ஒரு பகுதியாக இடம்பெற்ற குறித்த மூன்றாவது சர்வதேசக் கலந்துரையாடலில் இலங்கையின் பிரதிநிதியாக கலந்துகொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்ந்தும் உரையற்றுகையில்,

“ஆயுதப் போராளியாக ஒரு காலத்தில் செயற்பட்ட நான், பேச்சுவார்த்தைகள் மூலமே எமது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும் என்பததை புரிந்து கொண்டு ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொண்டு செயற்பட்டு வருகின்றேன்” என்று தெரிவித்துள்ளார்.

குறித்த சர்வதேச கலந்துரையாடலில் கலந்து கொண்டு ஆரம்ப உரையாற்றிய சீன ஜனாதிபதி சீ ஜின்பிங், பெல்ட் அண்ட் ரோட் முன்முயற்சியைப் முன்பெடுப்பதில் காலாவதியான புவிசார் அரசியல் சூழ்ச்சியை சீனா பின்பற்றாது எனவும், அனைத்து தரப்பினருக்கும் வெற்றியளிக்கக் கூடிய ஒரு புதிய வகை சர்வதேச உறவுகளை வளர்க்க வேண்டும் என்பதுடன், மோதலின்றி நட்பு ரீதியான பேச்சுவார்த்தைகள் மூலமே உண்ர்வுபூர்வமான பிரச்னைகளை தீர்ககவும், நீதியின் அடிப்படையிலான மத்தியஸ்தத்தை ஊக்குவிக்கவும் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்திருந்தமையையே கடற்றொழில் அமைச்சரினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. (அ)

# பொலிஸ் மா அதிபருக்கு 2 வாரங்கள் சேவை நீடிப்பு

## பிரச்னை இல்லை என்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஒக். 21

அடுத்த பொலிஸ்மா அதிபர் யார்? என பல கருத்துக்கள் நிலவிவரும் நிலையில் தற்போது பொலிஸ் மா அதிபராக கடமையாற்றும் சந்தன தீபால் விக்ரமரத்னவுக்கு இரண்டு வார கால சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவ்விவகாரம் தொடர்பில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்னுடன் கலந்துரையாடியதன் பின்னர் மேலும் இரண்டு வார கால நீடிப்பு வழங்க தீர்மானித்ததாக பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

இது தொடர்பில் ஜனாதிபதிக்கு தெரியாது என சமூக வலைத்தளங்களில் பரவி வரும் செய்திக்கு பதிலளிக்கும் வகையில் குறித்த சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கடந்த வாரம் வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டதாகவும், அதற்கு முன்னர், பொலிஸ் மா அதிபர் பதவி தொடர்பில் நானும் ஜனாதிபதியும் கலந்துரையாடி



னோம்.

இதன்படி, ஜனாதிபதியும் சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவிருந்த மையினால், பொலிஸ் மா அதிபராக கடமையாற்றிய சந்தன தீபால் விக்ரமரத்னவுக்கு மூன்று வார கால சேவை நீடிப்பு வழங்குவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இது தொடர்பில் பொறுப்பான அமைச்சருக்குத் தெரியாமல் ஜனாதிபதி சேவை நீடிப்பு வழங்கியதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தால் அது முற்றிலும் அடிப்படையற்றது.

பொலிஸ் மா அதிபர் விக்ரமரத்னவின் சேவையை இம்மாத இறுதி வரை நீடிப்பது பிரச்னைக்குரிய நிலை இல்லை -என்றார். (அ)

# தோட்டாக்களுடன் பிக்கு கைது!

கொழும்பு, ஒக். 21

ரம்புக்கனை பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றில் வசித்து வரும் பிக்கு ஒருவர் ரி-56 ரக துப்பாக்கிக்கான மகசீன்கள்2 மற்றும் 161 தோட்டாக்களுடன் நேற்று முன் தினம் மாலை கைது செய்யப்பட்டதாக ரம்புக்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர் ஹொரணபலி மற்றும் பௌத்த பல்கலைக்கழகத்தில் மூன்றாம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவர் பிக்கு என அப்பகுதியின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சந்தேகத்திற்குரிய மாணவ பிக்கு வசிக்கும் விகாரையின் மடாதிபதி வழங்கிய அறிவித்தலின் அடிப்படையில் பொலிஸ் குழுவொன்று அங்கு சென்று இரண்டு மகசீன்கள் மற்றும் தோட்டாக்களுடன் மாணவர் பிக்குவை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கு மேலதிகமாக, 850 கிராம் கஞ்சா வைத்திருந்த சந்தேகத்தின் பேரில், மற்றுமொரு பிக்குவும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# எரிவாயுவின் விலை மீண்டும் உயர்கிறது!

கொழும்பு, ஒக். 21

**லிட்ரோ எரிவாயுவின் விலை மீண்டும் அதிகரிக்கப்படும் என அந்நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.**

**அடுத்த விலை திருத்தத்தில், 12.5 கிலோ எடை கொண்ட எரிவாயு சிலிண்டரின் விலை 200 ரூபாவால் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.**

உலக சந்தையில் எரிவாயு விலை தொடர்ந்து அதிகரித்து வருவதால் உள்நாட்டில் எரி வாயுவின் விலைகள் பெருமள வில் அதிகரிக்கும் சூழ்நிலை தோன்றியுள்ளது.

தற்போது 12.5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 3470 ரூபாவாகும்.

எவ்வாறாயினும், நுகர் வோருக்கு குறைந்த தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் விலை அதிகரிப்பை மேற்கொள்ள பரி சீலிக்கப்படுவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் - பலஸ்தீனத்துக்கு இடையில் ஏற்பட்டுள்ள போரால் உலக சந்தையில் எரி வாயு மற்றும் எரிபொருள் விலை கள் அதிகரித்து வருவதால் இலங்கையின் பொருளாதாரத் தில் இது பாரிய தாக்கத்தை ஏற்படுத்துமென பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத் துள்ளனர். (அ)

# காஸாவிலுள்ள இலங்கையரை பாதுகாக்கவேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

கொழும்பு, ஒக். 21

“காஸாவிலுள்ள இலங் கையர்களைப் பாதுகாக்க வேண்டும்” என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

இஸ்ரேல்- பலஸ்தீனத்திற்கு இடையே இடம்பெற்று வரும் போர் குறித்து நேற்று பாராளு மன்றத்தில் உரையாற்றிய போதே சஜித் பிரேமதாஸ இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்

காஸா பகுதியில், இடம் பெற்று வரும் போரினால் இஸ் ரேலில் பணியாற்றிய களனி பகுதியில் வசித்த 49 வயது டைய அனுலா ஜயதிலக என்ப வர் உயிரிழந்துள்ளார். அத்து டன் வென்னப்புவ பகுதியைச் சேர்ந்த யட்டவர பண்டார எனும் இலங்கையர் காணாமற் போயுள்ளார் என்றும் இவர் தொடர்பாக இஸ்ரேலில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் தெரியவந் துள்ளது.

இந்த மோதலில் இன்னொரு இலங்கையர் ஒருவர் காயம டைந்துள்ளார். வடக்கு காஸா விலிருந்து தெற்கு காஸா நோக்கி சென்றவர்களில் 17 இலங்கையர்கள் இருப்பதாக வும் அவர்கள், எகிப்தின் ரபா, எல்லை வழியாக எகிப்துக்கு செல்ல ஏற்பாடு செய்யப்பட் டுள்ளதாகவும் தெரியவந்துள் ளது.

ஜோர்டானில் இருந்து சட்டவிரோதமாக இஸ்ரே லுக்குள் நுழைந்த இரண்டு பெண்கள் கைது செய்யப் பட்டுள்ள நிலையில், இதுவரை அவர்கள் தொடர்பாக தகவல் கள் தெரியவில்லை. பாலஸ்தீ னத்தில் 6 இலங்கையர்களும், காஸா முனையில் 3 குடும்பங் களைச் சேர்ந்த 17 இலங்கையர் களும் வாழ்ந்து வருகின்றனர். இஸ்ரேலில் 8 ஆயிரம் இலங் கையர்கள் வாழுகிறார்கள்.

இவர்களில் 1000 பேரளவில் சட்டவிரோதமாக நுழைந்த வர்கள் என தெரியவந்துள்ளது. யாராக இருந்தாலும், அவர்கள் அனைவரையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (அ)

# தேங்காய் பறிக்க சென்ற குடும்பஸ்தர் உயிரிழப்பு!

கொழும்பு, ஒக். 21

வீடு ஒன்றில் தேங்காய் பறிக்க சென்ற நபர் ஒருவர் தென்னை மரத்தின் நடுப் பகுதியில் சாய்ந்திருந்த மற்றுமொரு மரத்தின் கிளை யில் சிக்கி உயிரிழந்துள்ளதாக ஹொரணை, வெலிகல திப் பொதுகொட பிரதேச பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

மூன்று பிள்ளைகளின் தந் தையான 39 வயதுடைய சஞ் சீவ பிரியங்கர என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வேலைக்காக தேங்காய் உடைக்கும் பணியில் ஈடுபட்டி ருந்த உயிரிழந்த நபர், நேற்றுக் காலை வீடொன்றில் தேங்காய் உடைக்கச் சென்ற போதே இந் தச் சம்பவத்தை எதிர்கொண் டுள்ளார்.

சம்பவத்தை கண்ட பிர தேசவாசிகள் பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவுக்கு தகவல் வழங்கியதையடுத்து, ஹொரணை திடீர் மரண விசாரணை அதிகாரி சுமேதா குணவர்தன மற்றும் பொலிஸ் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் இணைந்து நடத் திய விசாரணையின் பின்னர், ஹொரணை தீயணைப்பு திணைக்கள அதிகாரிகள் வரவ ழைக்கப்பட்டு மரத்திலிருந்து இறந்தவரின் சடலத்தை மீட் டனர். (அ)

# சீனாவில் உயர்மட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி பேச்சு

## முதலீடுகளை மேற்கொள்ளுமாறு அழைப்பு

கொழும்பு, ஒக். 21

சீனாவுக்கான நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற் கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சீன தொலைதொடர்பாடல் நிர் மாணக் கூட்டுத்தாபனம், சினோபெக் நிறுவனம், BYD நிறு வனம் உள்ளிட்ட உயர்மட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இலங்கையின் எதிர்கால முதலீட்டு வாய்ப்புகள் தொடர் பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

துறைமுக நகரத்தை சர்வ தேச நிதி மத்தியஸ்தானமாக மாற்றியமைத்தல், துறைமுக நகரத்திற்கான புதிய சட்டதிட் டங்களை உருவாக்குதல், துறை முக நகரத்திற்காக மட்டுப்படுத் தப்பட்ட நீதிமன்ற மற்றும் வழி காட்டல் முறைமைகளை உரு வாக்குதல் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது.

அதேபோல் இலங்கையின் போக்குவரத்துக் கட்டமைப்பை மின்சாரத்தின் ஊடாக இயக்கு தல், மின் வாகன பாகங்களை ஒழுங்கமைத்தல், மின்சார ரயில் சேவைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந் தாலோசிக்கப்பட்டது.

இலங்கையின் பொருளா தார முன்னேற்றத்திற்கு முடிந்த வகையில் உயரிய பங்களிப்பை வழங்குவதாகவும், இலங்கை யின் முதலீட்டு வாய்ப்புக்களை பயன்படுத்திக்கொள்வதாகவும் முதலீட்டாளர்கள் ஜனாதிபதி டத்தில் உறுதியளித்தனர்.

ஜனாதிபதியுடன் இலங்கை தூதுக்குழுவினரும் இச்சந்திப் பில் கலந்துகொண்டனர். (அ)

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் லஞ்சம் பெற்றனர்

## நீதி அமைச்சர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 21

ஊழல் ஒழிப்பு சட்டத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக இலஞ்ச - ஊழல் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் இலஞ்சம் பெற்றுள்ள தாக நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள் ளார்.

இலஞ்ச - ஊழல் ஆணைக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் பொறுப்பை அரசி யலமைப்பு பேரவை தவறிவிட் டுள்ளதாக பாராளுமன்ற உறுப் பினர் மஹிந்தானந்த அளுத் கமகே முன்வைத்த குற்றச் சாட்டு தொடர்பில் பதிலளிக் கும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன் வைத்து உரையாற்றிய நீதி அமைச்சர்,

“ஊழல் - ஒழிப்பு சட்ட மூலத்திற்கு எதிராக சட்ட நடவ டிக்கை எடுப்பதற்காக பதவி உயர்வு மற்றும் இலஞ்சத்தை பெற்றுள்ள இலஞ்ச - ஊழல் ஆணைக்குழுவின் ஆணையா ளர் ஒருவர் குறித்த சட்டத்தை சவாலுக்கு உட்படுத்தி உயர் நீதிமன்றில் வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளார்.

இலஞ்ச - ஊழல் ஆணைக் குழுவின் உறுப்பினர்கள் அரசி யலமைப்பு சபைக்கு கடிதம் எழுதி, சபையின் பத்து உறுப் பினர்களையும் அச்சுறுத்தியுள் ளனர். இலஞ்ச - ஊழல் ஆணைக் குழுவின் உறுப்பினர்கள் எவ் வாறு அரசியலமைப்பு சபையை அச்சுறுத்த முடியும்?. அரசியலமைப்பு சபையை அவ மதிக்கும் நோக்கம் எனக்கு இல்லை. அரசியலமைப்புச் சபை உருவாக அடித்தளமிட் டது நானே.

இலஞ்ச - ஊழல் ஆணைக் குழுவின் ஆணையாளர்கள் தன்னிச்சையாக செயல்பட முடியாது. குறித்த சட்டம் கடந்த மாதம் 15ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டுள்ள துடன், அவர்கள் தற்காலிக மாகவே பதவி வகிக்க முடியும்.

ஊழல் ஒழிப்பு சட்டமூலத் தில் தமக்கு நியமனங்களை வழங்கும் அதிகாரங்கள் உள்ள தாக கூறுகின்றனர். அவ்வாறு எவ்வித அதிகாரங்களும் இல்லை.

21ஆவது திருத்தச்சட்டம் கடந்த ஆண்டு ஒக்டோபர் 31ஆம் திகதிமுதல் அமுல்படுத் தப்பட்டுள்ளதால் இவற்றுக் கான நியமனங்களை வழங்கும் அதிகாரம் அரசியலமைப்பு சபைக்கே உள்ளது.

ஊழல் ஒழிப்பு சட்ட மூலத் துக்கு எதிராக செயல்படும் நோக்கில் ஆணைக்குழுவின் மூன்று ஆணையாளர்களும் இலஞ்சம் பெற்றுள்ளனர்“ என்றும் அவர் கூறினார். (அ)

# மலையக மக்களின் வலிகளை மாற்றியமைத்தது இ.தொ.காவே

## ஜெனிவாவில் ஜீவன் உரை

ஜெனிவா, ஒக். 21

இலங்கையில் வாழும் இந் திய வம்சாவளி மக்களான மலையக மக்கள் கடந்துவந்த வலி நிறைந்த வரலாற்றை மாற்றியமைக்கும் பிரதான தொழிற்சங்கம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸே என அக்கட்சியின் பொதுச்செயலா ளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்ச ருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

ஜெனிவாவில் நடைபெற்ற சர்வதேச பொதுசேவைகள் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

இம்மாநாட்டில் தொடர்ந்து கருத்து தெரிவித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான்,

“1948இல் மலையக மக்க ளின் குடியுரிமை பறிக்கப்பட் டது. பின்னர் ஏற்படுத்தப்பட்ட சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் பலர் நாடு கடத்தப்பட் டனர். பின்னர் மூன்று தசாப்த யுத்தத்திலும் பெரிதும் பாதிக் கப்பட்டனர்.

அதனால்தான் எமது சொந் தங்களின் வாழ்வு வலிசுமந்த பயணம் என குறிப்பிடுகின்றேன்.

இலங்கை அரசாங்கமானது கடந்த காலங்களில் கொள்கை ரீதியிலான மாற்றங்களின் போது பன்முகத்தன்மை பற்றி சிந்திக்கவில்லை. 2022 இல் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு, தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்ட மைக்கு இதுவும் ஒரு கார ணமே.

நெருக்கடிகளுக்கு மத்தியி லும் தொழிலாளர்கள் பக்கம் நின்று தேவையான ஆலோச னைகளையும், அழுத்தங்களை யும் பிரயோகித்தோம்.

இதன்படி பொருளாதார மறுசீரமைப்பு திட்டங்கள் வகுக்கப்பட்டதுடன், தொழி லாளர்கள் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கையிலுள்ள தொழில் துறைகளில் பெருந்தோட்ட தொழில்துறை முன்னோடியான தும், முதன்மையானதுமாகும்.

இலங்கையில் 15 இலட்சம் வரை மலையகத் தமிழர்கள் வாழ்கின்றனர்.

அவர்களில் பெருந்தோட்ட தொழில்துறையில் தற்போது சுமார் ஒன்றரை இலட்சம் பேர்



தொழில் புரிகின்றனர்.

அம்மக்களின் மேம்பாட்டுக் காக ஒரு கட்சியாக, தொழிற் சங்கமாக எம்மால் முடிந்த வற்றை செய்துள்ளோம். தற் போது காணி உரிமை மற்றும் வீட்டுரிமைக்கான புரட்சிகர மான திட்டங்கள் செயற்படுத் தப்பட்டு வருகின்றன.

இலங்கையில் தொழில் துறைசார் சட்டங்கள் மறுசீர மைக்கப்படுகின்றன. திருத் தங்கள் முன்வைக்கப்பட்டன. அவை உரிய வகையில் உள் வாங்கப்படவில்லை. திருத்தி அமைக்குமாறு கோரி யுள்ளோம்.

இனம், மதம், மொழிக்கு அப்பால் மனிதத்தை விரும்பும் இளைஞர் குழுவாக செயற்பட் டால் நாட்டையும், உலகையும் மாற்றலாம். இதில் அனைத்து தொழில் துறைகளும் இணைய வேண்டும்” என தெரிவித்தார்.

# கல்முனை விசேட முகாமைத்துவ குழு கூட்டம் குழப்ப நிலை காரணமாக பிற்போடப்பட்டது!



அம்பாறை, ஒக். 21

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபே விக்ரம தலைமையில் இன்று நடைபெறவிருந்த விசேட முகாமைத்துவக் குழு கூட்டம் குழப்பநிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது.

குறித்த கூட்டம் நேற்று கல்முனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் காலை 9 மணியளவில் ஆரம்பமாக இருந்த நிலையில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு முதலில் சென்ற அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபே விக்ரம அங்கு ஒன்றுகூடிய பொதுமக்களினால் தடுத்து நிறுத்தப்பட்டார்.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு கல்முனை தலைமையக பொலிஸார் வருகை தந்து பொது மக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியபோதிலும் அங்கு ஒன்றுகூடிய மக்கள் உப பிரதேச செயலகத்திற்கான அதிகாரங்கள் தொடர்பில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருடன் பிரஸ்தாபித்தனர்.

இதனை தொடர்ந்து அங்கு கருத்து தெரிவித்த அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர், விசேட முகாமைத்துவக் குழுக் கூட்டம் ஒன்றை நடத்தி இதற்கான தீர்வொன்றைப் பெற முயற்சிப்பதாக பொதுமக்களிடம் குறிப்பிட்டிருந்தார்.

அம்பாறை மாவட்ட செயலாளர் கல்முனை வடக்கு பிரதேச பிரதேச செயலாளர் ரீ.ஜே. அதிசயராஜூடன் காணப்பட்டார்.

பின்னர் அவ்விடத்தில் இருந்து அருகில் உள்ள கல்முனை பிரதேச செயலகத்துக்கு சென்ற அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர், கல்முனை பிரதேச செயலாளர் ஜெ.லியாகத் அலி தலைமையிலான அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடி அவ்விடத்தில் இருந்து சென்றார்.

இதேவேளை, கல்முனை பிரதேச செயலகம், கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் செயற்பாடுகள் தொடர்பில் எழுந்துள்ள முரண்பாடுகளினால் இரு தரப்பினரும் வழக்குத் தாக்கல் மேற்கொண்டுள்ளதுடன் வழக்கு விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

(அ)

# ஈழத் தமிழ் ஊடகவியலாளர் படுகொலை நினைவுநாள் மட்டக்களப்பில் அனுஷ்டிப்பு





மட்டக்களப்பு, ஒக். 21

ஈழத்தில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களின் சர்வதேச நினைவு நாள் மற்றும் படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் நிமலராஜனின் நினைவு தினமும் நேற்று முன் தினம் வியாழக்கிழமை மட்டக்களப்பு காந்தி பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர் நினைவுத் தூபியில் அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நினைவு கூரல் நிகழ்வு ஒன்றியத்தின் தலைவர் வா.கிருஸ்ண குமார் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது இதுவரை உயிர்நீத்த ஊடகவியலாளர்கள், சிரேஷ்ட ஊடகர் நிமலராஜன் மற்றும் இஸ்ரேல்- பலஸ்தீன போரில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவு கூரப்பட்டனர்.

இந்நினைவு கூரலின் போது மாவட்டத்திலுள்ள பல ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

(அ)

# கல்முனை எக்டோ நூலகத்தில் இன்று இரத்த தான முகாம்

அம்பாறை, ஒக். 21

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் இரத்த வங்கியில் நிலவும் இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்திக்கும் முகமாக கல்முனை கல்வி, கலாச்சார மேம்பாட்டு தாபனத்தின் எக்டோ நூலகத்தின் 20ஆவது வருட பூர்த்தியினை முன்னிட்டு 02ஆவது தடவையாக இரத்ததான முகாம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

இன்று சனிக்கிழமை பள்ளி ஒழுங்கை,கல்முனை-09 இல் அமைந்துள்ள எக்டோ நூலகத்தில் காலை 8.00 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை இரத்த தான முகாம் இடம்பெறவுள்ளது.

மனித உயிர் காக்கும் இரத்த தான முகாமில் ஆண் மற்றும் பெண் இருபாலரும் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்க முன்வருமாறு அனைவரையும் ஏற்பாட்டுக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

(அ)



# ஆசிரியர்களுக்கான 2 நாள் செயலமர்வு மட்டக்களப்பில்

மட்டக்களப்பு, ஒக். 21

பாடசாலைகளில் செயல்திறன் மிக்க கற்றல், கற்பித்தல் அணுகுமுறை தொடர்பான ஆசிரியர்களுக்கான இரண்டு நாள் செயலமர்வு மட்டக்களப்பில் நடைபெற்றது.

அக்சன் யுனிட்டி லங்கா நிறுவனத்தின் ஏற்பாட்டில், சைல்ட் பண்ட் நிறுவனத்தின் நிதி அனுசரணையில், மட்டக்களப்பு ,கல்குடா, மட்டக்களப்பு மத்தி, பட்டிருப்பு ஆகிய நான்கு கல்வி வலயங்களில் கடமையாற்றும் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு செயலமர்வு நடைபெற்றது.

கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் சுஜாதா குலேந்திரகுமாரின் அனுமதியுடன், அக்சன் யுனிட்டி லங்கா சிரேஸ்ட நிறைவேற்று அதிகாரி கஜேந்திரன் தலைமையில் மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ நிறுவன பிரதான மண்டபத்தில் இந்த செயலமர்வு நடைபெற்றது.

செயலமர்வில் வளவாளராக பாடசாலைகளில் செயல்திறன் மிக்க கற்றல் கற்பித்தல் அணுகுமுறை திட்ட பிரதான பயிற்றுவிப்பாளர் மாக்ரெட் தேவதாசன் கலந்துகொண்டார். (அ)

# வரட்சியால் பாதிக்கப்பட்டவர்கள் வருமானம் குறைந்தோருக்கு உதவி

அம்பாறை, ஒக். 21

பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் வருமானம் குறைந்த குடும்பத்தவர்கள் போன்றோருக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் பொத்துவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

ஹெல்ப் ஏஜ் நிறுவனத்தின் அனுசரணையில் பொத்துவில் பிரதேச செயலகத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட குடும்பத்தவர்களுக்கு இவ்வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

பிரதேச செயலாளர் சட்டத்தரணி பிர்னாஸ் இஸ்மாயில் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது வருமானம் குறைந்த சுமார் நூறு குடும்பத்தவர்களுக்கு இவ்வுதவிகள் வழங்கப்பட்டன.

கடந்த காலத்தில் நிலவிய வறட்சியுடனான காலநிலையின்போது பாதிக்கப்பட்ட குடும்பத்தவர்கள் மற்றும் வருமானம் குறைந்த குடும்பத்தவர்களுக்கென ரூபா பத்தாயிரம் பெறுமதியான அத்தியவசிய பொருட்கள் அடங்கிய உலருணவுப் பொதிகள் இதன்போது வழங்கப்பட்டன.



வரட்சியான காலநிலையின் போது மக்களுக்கு பெரிதும் பயன்படும் குடிதண்ணீரை சேமித்து வைக்கும் இரண்டாயிரம் லீற்றர் கொள்ளவுடைய 10 தண்ணீர் தாங்கிகள், குடிதண்ணீர் சேமிக்கும் சிறிய தண்ணீர் கலன்கள் உள்ளிட்ட உதவிப் பொருட்களும் இதன் போது வழங்கப்பட்டன.

பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட ஆத்திமுனை, செங்காமம், கோமாரி ஆகிய பகுதிகளில் வசித்து வரும் விதவைகள், விசேட தேவையுடையோர், முதியோர் மற்றும் வருமானம் குறைந்த குடும்பத்தவர்கள் போன்றோருக்கும் இவ்வுதவிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வின்போது ஹெல்ப் ஏஜ் நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட பிரதானி எம்.எஸ்.சமிந்த டி சில்வா, நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் கேணல் டி.எல். சரத் சாந்த, கிழக்கு மாகாண நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் தாறுக்க தனஞ்சய பண்டார உள்ளிட்ட பிரதேச செயலக அதிகாரிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# ஹமாஸுடன் ரஷ்யாவை ஒப்பிட்டு பேசினார் பைடன்

நியூயோர்க், ஒக். 21

**உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பையும், இஸ்ரேல் மீதான ஹமாஸின் திகைப் பூட்டும் தாக்குதலையும் ஒன்றாக ஒப்பீடு செய்துள்ளார் அமெரிக்க ஜனதிபதி ஜோ பைடன்.**

**அமெரிக்க மக்களுக்கு ஆற்றிய உரையில் அவர் இதனை தெரிவித்தார்.**

**“ஹமாஸ் மற்றும் புடின் வெவ்வேறு இழைகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். ஆனால் அவர்கள் இதைப் பொதுவாகப் பகிர்ந்து கொள்கிறார்கள்: அவர்கள் இருவரும் அண்டை நாடுகளின் ஜனநாயகம் முற்றிலும் அழிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள்“ என்றார் பைடன்.**



“இஸ்ரேல் மற்றும் உக்ரைன் உள்ளிட்ட எங்கள் முக்கியமான பங்காளிகளுக்கு ஆதரவளிக்க அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு தேவைகளுக்கு நிதியுதவி செய்ய” காங்கிரஸுக்கு அவசர பட்ஜெட் கோரிக்கையை சமர்ப்பிக்கப் போகிறேன்“ என்றார் அவர்.

“இது ஒரு புத்திசாலித்தனமான முதலீடு, இது தலைமுறைகளுக்கு அமெரிக்க பாதுகாப்புக்கு ஈவுத்தொகையை செலுத்தப் போகிறது,” என்று அவர் வலியுறுத்தினார்.

“அமெரிக்கத் துருப்புக்கள் ரஷ்யாவில் போரிடவோ அல்லது ரஷ்யாவிற்கு எதிராகப் போரிடவோ நாங்கள் விரும்பவில்லை,” என்று அவர் கூறினார்.

அதேவேளை, அமெரிக்க துருப்புக்கள் காசா போரில் ஈடுபடுவதற்கான சாத்தியத்தை அவர் நிராகரிக்கவில்லை.

முன்னதாக, ஹிஸ்புல்லா போரில் இணைந்தால் அமெரிக்கா தனது துருப்பை அனுப்புமென இஸ்ரேலுக்கு அமெரிக்க ஜனதிபதி உத்தரவாதமளித்ததாக செய்தி வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த உதவியானது “எங்கள் குழந்தைகள் மற்றும் பேரக்குழந்தைகளுக்கு பாதுகாப்பான, மிகவும் அமைதியான, வளமான உலகத்தை உருவாக்க உதவும்” என்று பைடன் தேசத்திற்கு ஆற்றிய உரையில் குறிப்பிட்டார்.

“அமெரிக்கக் கூட்டணிகள் தான் எங்களை அமெரிக்காவைப் பாதுகாப்பாக வைத்திருக்கின்றன. அமெரிக்க மதிப்புகள் தான் நம்மை ஒரு கூட்டாளி நாடுகளுடன் இணைந்து பணியாற்ற விரும்புகிறது. நாங்கள் உக்ரைனில் இருந்து விலகிச் சென்றால் அல்லது இஸ்ரேலுக்கு ஆதரவளிப்பதிலிருந்து பின்வாங்கினால் அதையெல்லாம் ஆபத்தில் ஆழ்த்துவது - அது மதிப்புக்குரியது அல்ல,” என்று பைடன் கூறுகிறார்.

(அ)

## காஸா தேவாலயத்தில் தங்கியிருந்த பொதுமக்கள் மீது இஸ்ரேல் தாக்குதல்



ஜெருசலேம், ஒக். 21

இஸ்ரேலிய தாக்குதல்களுக்கு அஞ்சி காசா பகுதியில் உள்ள தேவாலய வளாகத்தில் தஞ்சம் புகுந்த பொதுமக்களை இலக்கு வைத்து இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் பல இடம்பெயர்ந்த மக்கள் கொல்லப்பட்டு காயமடைந்ததாக ஹமாஸின் கட்டுப்பாட்டில் உள்ள உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கிரேக்க ஆர்த்தடோக்ஸ் செண்ட் போர்பிரியஸ் தேவாலயத்தின் வளாகத்தில் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், “பெரிய எண்ணிக்கையிலானவர்கள் உயிரிழந்தனர் மற்றும் காயமடைந்தனர்” விட்டுச் சென்றது என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

பலஸ்தீனப் பகுதியில் போர் மூண்டதால், பல காசா வாசிகள் தஞ்சம் புகுந்திருந்த வழிபாட்டுத் தலத்திற்கு அருகில் உள்ள இலக்கை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக சாட்சிகள் ஏ.எவ்.பியிடம் தெரிவித்தனர்.

இஸ்ரேலிய இராணுவத்தை ஏ.எவ்.பி தொடர்பு கொண்டபோது, தாக்குதல் சம்பவத்தை சரிபார்த்து வருவதாகக் கூறியது.

தாக்குதல் தேவாலயத்தின் முகப்பை சேதப்படுத்தியது. அருகிலுள்ள கட்டடம் இடிந்து விழுந்தது. காயமடைந்த பலர் மருத்துவமனைக்கு வெளியேற்றப்பட்டனர் என்று சாட்சிகள் தெரிவித்தனர்.

செண்ட் போர்பிரியஸ் என்பது காசாவில் இன்னும் பயன்பாட்டில் உள்ள மிகப் பழமையான தேவாலயமாகும். இது நகரின் வரலாற்றுச் சிறப்புமிக்க சுற்றுப்புறத்தில் அமைந்துள்ளது.

ஹமாஸ் அதிகாரிகளின் கூற்றுப்படி செவ்வாயன்று இஸ்ரேலிய தாக்குதலில் குறைந்தது 471 பேர் கொல்லப்பட்ட அல்-அஹ்லி அரபு மருத்துவமனையிலிருந்து தேவாலயம் வெகு தொலைவில் இல்லை.

ஒக்ரோபர் 7 அன்று ஹமாஸ் போராளிகள் நடத்திய தாக்குதலில் குறைந்தது 1,400 பேர் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் கூறுகிறது, அவர்களில் பெரும்பாலோர் பொதுமக்கள்.

ஹமாஸ் சுகாதார அமைச்சின் கூற்றுப்படி, இஸ்ரேலிய குண்டுவீச்சில் காசா பகுதியில் குறைந்தது 3,859 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.



## யேமனின் ஹூதி படைகளால் ஏவப்பட்ட ட்ரோன், ஏவுகணைகளை வீழ்த்திய அமெ.

நியூயோர்க், ஒக். 21

யேமனின் ஹூதி படைகளால் ஏவப்பட்ட மூன்று தரை வழி தாக்குதல் ஏவுகணைகள் மற்றும் பல ஆளில்லா விமானங்களை வடக்கு செங்கடலில் நிலைகொண்டுள்ள அமெரிக்க போர்க்கப்பலான யு.எஸ்.எஸ் கார்னி, இடைமறித்து தாக்கியழித்துள்ளதாக பென்டகன் செய்தித் தொடர்பாளர் பிரிக்கேடியர் ஜெனரல் பாட் ரைடர், செய்தியாளர்களிடம் கூறினார்.

“இந்த ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் எதைக் குறிவைக்கின்றன என்பதை நாங்கள் உறுதியாகக் கூற முடியாது, ஆனால் அவை யேமனில் இருந்து செங்கடல் வழியாக வடக்கே, இஸ்ரேலின் இலக்குகளை நோக்கி ஏவப்பட்டன” என்று பென்டகன் மாநாட்டில் ரைடர் கூறினார்.

அவற்றின் பறத்தல் விவரத்தின் அடிப்படையில் “சாத்தியமான அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன” என்பதால் ஏவுகணைகள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக ரைடர் குறிப்பிட்டார்.

மேலும் “இந்த முக்கியமான பிராந்தியத்தில் எங்கள் கூட்டாளர்களையும் எங்கள் நலன்களையும் பாதுகாக்க” தேவையான அனைத்தையும் செய்ய அமெரிக்கா தயாராக உள்ளது என்று அவர் கூறினார். (அ)

## அமெரிக்காவில் வசூலை அள்ளி குவிக்கும் லியோ!

நியூயோர்க், ஒக். 21

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நேற்று முன் தினம் வெளியாகியுள்ள விஜய்யின் லியோ திரைப்படம் அமெரிக்காவில் ஜெயிலர், துணிவு, ஜவான் படங்கள் வசூலித்ததை விடவும் அதிகமாக வசூல் செய்துள்ளது. இதனால் விஜய் ரசிகர்கள் உற்சாகம் அடைந்துள்ளனர். இன்று வெளியான லியோ திரைப்படம் நல்ல விமர்சனங்களை பெற்று வருகிறது.

படத்தின் 2ஆம் பாதியை விட முதல் பாதி நன்றாக இருப்பதாக ரசிகர்கள் கூறி வருகின்றனர். கடந்த 6 மாதங்களுக்கும் மேலாக இந்த படம் ஏற்படுத்திய எதிர்ப்பார்ப்பால், படத்தை பார்ப்பதற்கு ரசிகர்கள் ஆர்வம் காட்டி வருகிறார்கள். லியோ




படத்தை அமெரிக்காவில் பிரதியங்கிரா சினிமாஸ் வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவில் முதல் நாளில் மட்டுமே லியோ 1 மில்லியன் டொலர் அளவுக்கு வசூலித்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த அளவு வசூலை ஷாருக் கானின் ஜவான், அஜித்தின் துணிவு மற்றும் ரஜினியின் ஜெயிலர் படங்கள் பெறவில்லை. அமெரிக்காவில் மட்டும் லியோ திரைப்படம் 1000 இற்கும் அதிகான இடங்களில் திரையிடப்பட்டுள்ளது

ரிக்கெட்டுக்கு தொடர்ந்து கேள்வி இருப்பதால் லியோ அமெரிக்காவில் வசூலில் புதிய உச்சத்தை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முன்னதாக ரஜினியின் கபாலி திரைப்படம் தான் முதல் நாளில் அமெரிக்காவில் அதிக தொகையை வசூலித்திருந்தது. இதனை லியோ முறியடித்திருப்பதாக விநியோகஸ்தர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## உலகம் முழுவதிலும் வசிக்கும் அமெரிக்கர்களுக்கு எச்சரிக்கை

நியூயோர்க், ஒக். 21

உலகெங்கிலும் உள்ள பல்வேறு இடங்களில் வன்முறை மற்றும் அதிகரித்த பதட்டங்கள் காரணமாக வெளிநாட்டில் உள்ள அமெரிக்க குடிமக்கள் அதிக எச்சரிக்கையுடன் செயல்படுமாறு அமெரிக்க வெளியுறவுத்துறை உலகம் தழுவிய எச்சரிக்கை பாதுகாப்பு எச்சரிக்கையை வெளியிட்டது.

அமெரிக்க குடிமக்கள் மற்றும் நலன்களுக்கு எதிரான பயங்கரவாத தாக்குதல்கள், ஆர்ப்பாட்டங்கள் அல்லது வன்முறை நடவடிக்கைகளுக்கான சாத்தியக்கூறுகள் காரணமாக இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க குடிமக்கள் சுற்றுலாப் பயணிகள் அடிக்கடி வரும் இடங்களில் விழிப்புடன் இருக்குமாறும், தகவல் மற்றும் விழிப்பூட்டல்களுடன் புதுப்பித்த நிலையில் இருக்க ஸ்மார்ட் டிராவலர் என்ரோல்மென்ட் திட்டத்தில் தங்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இது வெளிநாட்டில் அவசரநிலை ஏற்பட்டால் குடிமக்களைக் கண்டறிவதை எளிதாக்குகிறது.

(அ)

*பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்:*

# பாராளுமன்றில் சமர்ப்பிக்காததை உயர்நீதிமன்றத்துக்கு அறிவியுங்கள்

## அநுரகுமார எம். பி. கோரிக்கை

கொழும்பு, ஒக். 21

**பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் பாராளுமன்றத்துக்கு இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை. ஆனால், சட்டமூலம் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளது. பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் பாராளுமன்ற ஒழுங்கு பத்திரத்தில் உள்ளடக்கவில்லை, சபைக்கு சமர்ப்பிக்கவில்லை என்பதை நீதியமைச்சர் உயர்நீதிமன்றத்துக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க சபையில் வலியுறுத்தினார்.**

**பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடந்த அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.**

**அவர் மேலும் உரையாற்றியதாவது:-**

2023.10.03 ஆம் திகதி பாராளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் பிரேரணை முன்னறிவித்தல்கள் மற்றும் தினப்பணிகள் பிரிவில் நிகழ்நிலை காப்புச் சட்டமூலம், பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் ஆகிய சட்டமூலங்களை சபைக்கு சமர்ப்பிப்பதாக குறிப்பிடப்பட்டது.

சட்டமூல சமர்ப்பிப்பு பாராளுமன்ற ஒழுங்கு பத்திரத்தில் உள்வாங்கப்பட்டதன் பின்னர் நாட்டு பிரஜைகள் எவரும் அந்த சட்டமூலத்தை இரண்டு வாரங்களுக்குள் (14 நாட்கள்) உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியும். பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் பாராளுமன்ற ஒழுங்கு பத்திரத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது. ஆனால், முதல் வாசிப்புக்காக சபைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

'சட்டமூலம் ஒன்று பாராளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டதன் பின்னர்



நாட்டு பிரஜைகள் அதை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியும் ' என அரசியலமைப்பில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே, ஒழுங்குப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் ஐந்து மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஆனால், சபைக்கு சட்டமூலம் சமர்ப்பிக்கப்படவில்லை.

சட்டமூலம் ஒன்று பாராளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டதன் பின்னர் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்ப டுத்த முடியுமா, அல்லது சட்டமூலம் சபைக்கு சமர்ப்பித்ததன் பின்னர் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்த முடியுமா? என்ற பிரச்னை தோற்றம் பெற்றுள்ளது.

பாராளுமன்ற நிலையியல் கட்டளைக்கு பிரகாரம் நீதிமன்றம் செயற்படாது. அரசமைப்புக்கு அமைவாகவே நீதிமன்றம் செயல்படும். பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை உயர்நீதிமன்றத்தின் சவாலுக்குட்படுத்தும் காலவகாசத்தை முடக்க அரசாங்கம் முயற்சிக்கிறதா? என்ற சந்தேகம் காணப்படுகிறது.

ஆகவே பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் பாராளுமன்றத்துக்கு இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை என்பதை நீதியமைச்சர் உயர்நீதிமன்றத்துக்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்க வேண்டும்-என்றார்.

(அ)

# சிறுவன் மீது கத்திக்குத்து!

## மனநலம் பாதிக்கப்பட்ட இளைஞன் கைது!!

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ்ப்பாணத்தில் மனநலம் பாதிக்கப்பட்ட இளைஞன், சிறுவன் மீது கத்திக்குத்து தாக்குதலை மேற்கொண்டுள்ளான்.

தெல்லிப்பளைப் பகுதியில் நேற்று முன்தினம் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யாழ்.புறநகர் பகுதியை சேர்ந்த 21 வயதுடைய இளைஞன் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் , தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்காக வைத்தியசாலைக்கு அருகில் உள்ள உறவினர் வீட்டில் தங்கி இருந்துள்ளார்.

வீட்டில் இருந்த உறவினரான சிறுவன், உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில் வீட்டில் படுத்திருந்தவேளை சிறுவன் மீது இளைஞன் கத்திக்குத்து தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

அதனை அவதானித்த சிறுவனின் பெற்றோர் , தமது பிள்ளையை இளைஞனிடம் இருந்து பாதுகாத்து, வைத்தியசாலையில் அனுமதித்ததுடன், பலாலி பொலிஸாருக்கும் அறிவித்தனர்.

அதனை அடுத்து பலாலி பொலிஸார் கத்திக்குத்து தாக்குதல் நடத்திய இளைஞனை கைது செய்து, பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# பேக்கரி உற்பத்திகளின் விலைகளில் மாற்றம்!

கொழும்பு, ஒக். 21

மின்கட்டண அதிகர்ப்பைத் தொடர்ந்து பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளைத் திருத்துவது குறித்து பரிசீலிக்க உணவகங்கள் மற்றும் பேக்கரி உரிமையாளர்கள் முடிவு செய்துள்ளனர்.

மின்சாரக் கட்டண திருத்தத்தின் மூலம் தமது உற்பத்திகளின் விலையை அதிகரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுள்ளதாக தெரிவித்துள்ள அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷான், கலந்துரையாடலுக்கு பிறகு, விலை திருத்தம் செய்யும் முறை அறிவிக்கப்படும் என கூறினார்.

மின்சாரக் கட்டணத்தை 18 வீதத்தால் அதிகரிப்பதற்கு இலங்கை மின்சார சபைக்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நேற்று முன்தினம் அனுமதி வழங்கியுள்ளது.

திருத்தப்பட்ட கட்டணங்கள் ஜூன் 30, 2024 வரை அமுலில் இருக்கும் என்பதுடன், இது இந்த ஆண்டுக்கான மூன்றாவது மின் கட்டணத் திருத்தம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

# மருந்தாளர் பற்றாக்குறையால் வைத்தியசாலைகளில் சிக்கல்

கொழும்பு, ஒக். 21

மருந்தாளர் பற்றாக்குறை காரணமாக சில வைத்தியசாலைகளில் மருந்து விநியோகம் செய்வதில் கடும் தடைகள் ஏற்பட்டுள்ளதாக அரசாங்க மருந்தாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

வைத்தியசாலைகளில் இது பாரிய பிரச்னையாக மாறியுள்ளதாக அதன் தலைவர் துஷார ரணதேவ குறிப்பிட்டார்.

தற்போது நிலவும் பொருளாதார பிரச்னைகளால் மருந்தாளர்கள் பலர் வெளிநாட்டு வேலைகளை தேடிச் செல்வதனால் இந்த பிரச்னை ஏற்பட்டுள்ளதாக மருந்தாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சுகாதார அமைச்சகம் நடத்திய விசாரணையில், மருந்தாளர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப நிதி அமைச்சகத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாக சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(அ)

# விற்பனை நிலையத்தில் வெளியாகிய புகையால் 10 பேர் வைத்தியசாலையில்!

கொழும்பு, ஒக். 21

தலவாக்கலை பிரதேசத்தில் நச்சு புகையை சுவாசித்ததன் காரணமாக 09 பெண்களும் ஒரு ஆணும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தலவாக்கலை பிரதேசத்தில் வசிக்கும் 20 மற்றும் 22 வயதுடையவர்களே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் மாலை தலவாக்கலை நகரிலுள்ள ஆடை மற்றும் அலங்காரப் பொருட்கள் விற்பனை நிலையமொன்றின் ஊழியர்கள் நச்சுப்புகையை சுவாசித்து தலவாக்கலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அப்பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டபோது, கடையின் ஜெனரேட்டர் இயக்கப்பட்டதால், அதில் இருந்து வெளியேறிய நச்சுப் புகை காரணமாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

நோய்வாய்ப்பட்டவர்கள் லிந்துலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# மதுபோதையில் வாகனத்தை ஓட்டிய இ.போ.ச சாரதி கைது

மன்னார், ஒக். 21

மன்னார் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்ஸை மது போதையில் ஓட்டிச் சென்ற சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மன்னார் பஸ் நிலையத்தில் இருந்து கடந்த புதன்கிழமை மாலை தலைமன்னார் நோக்கி பயணிகளுடன் சென்ற பஸ்ஸின் சாரதி குடிபோதையில் வாகனத்தை செலுத்திய நிலையில் மன்னார் போக்குவரத்து பொலிஸாரால் மன்னார் வைத்தியசாலை வீதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில் குறித்த சாரதி குடிபோதையில் வாகனத்தை செலுத்தியமை உறுதி செய்யப்பட்ட நிலையில் சாரதியை கடந்த வியாழக்கிழமை மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியவேளை குறித்த சாரதியை எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

(அ)


# பதுளையில் பஸ் விபத்தில் ஒருவர் பலி ! 25 பேர் காயம்!!

கொழும்பு, ஒக். 21

பதுளையில் இபோச பஸ்ஸொன்று விபத்துக்குள்ளானதில் ஒருவர் பலியாகியுள்ளார். அத்துடன், 25 இற்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

பதுளையில் இருந்து கெட்டவத்த நோக்கி பயணித்த இ.போ.ச பஸ்ஸே, வீதியைவிட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்து இவ்வாறு விபத்துக்குள்ளானது.

வயோதிபப் பெண்ணொருவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.



காயமடைந்தவர்கள் மீகஹகிவுல வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். மேலதிக சிகிச்சைக்காக 7 பேர் பதுளை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

(அ)

## ஐ.நா. அமைப்புக்கள்...

கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துரைக்கையில்

காஸாவில் உள்ள வைத்தியசாலை மீது அண்மையில் தாக்குதல் நடத்தப்பட்டது. அதேபோன்று பாடசாலை, குடியிருப்புகள் மீது தாக்குதல் நடத்தப்படுகிறது. இந்த நிலைமையே இலங்கையிலும் காணப்பட்டது.

வடக்கு கிழக்கில் மக்கள் குடியிருப்புகள், பாடசாலைகள், வைத்தியசாலை மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதே போன்றுதான் காசாவில் நடக்கிறது.

இன்றைய நிலையில், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் மனித உரிமைகள் பேரவை அனைத்தும் பல் அற்ற பாம்புகளாகவே காணப்படுகின்றன. அவர்களுக்கு எந்தவொரு அதிகாரமும் கிடையாது. இவ்வாறானதொரு நிலையே இலங்கையிலும் காணப்பட்டது.

இலங்கையில் நடந்த யுத்தம் சாட்சியமற்ற நிலையில் காணப்பட்டது. காசாவில் நடைபெறும் யுத்தத்தை காணும் ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகளினால் இலங்கையில் நடத்த யுத்தத்தினை காண முடியவில்லை.

சர்வதேச சமூகத்தைப் பொறுத்தவரையில் நியாயம், நீதி, நேர்மை என்று எந்தவொரு விடயமும் கிடையாது.

இந்தியா, அமெரிக்க உள்ளிட்ட எந்தவொரு சர்வதேச நாடாக இருந்தாலும் தேசிய நலன் மாத்திரமே நியாயம் நீதியாக காணப்படுகிறது.

இலங்கை யுத்தத்தின் பின்னர் 40,000 பேர் கொல்லப்பட்டதாக உள்ளக அறிக்கையின் மூலம் ஐக்கிய நாடுகள் அறிந்து கொண்டதாக சொல்லப்பட்ட போதும், 100,000 பேர் கொல்லப்பட்டதாக தமிழ் தரப்பினால் முன்வைக்கப்பட்டது.

இதன்முலம் ஐ.நா. பாடம் கற்றுக் கொண்டதாக சொல்லப்பட்டது. ஆனால், ஐ.நா. எந்தவொரு பாடத்தினையும் கற்றுக்கொள்ளவில்லை. அவ்வாறு இருந்தால் காசாவில் இன்று இவ்வாறு நடக்கவாய்ப்பில்லை.

ஆகவே, சர்வதேச சமூகமல்ல நாட்டினுள் வாழும் நாம் பாடத்தினை கற்றுக்கொள்ள வேண்டும். சர்வதேச சமூகம் எம்மை ஒருபோதும் காப்பாற்றாது. எம்மை நாமே காப்பாற்றிக்கொள்ள வேண்டும் எனும் நிலைப்பாட்டிற்கு வரவேண்டும்.

பலஸ்தீனத்தின் இருப்பை இஸ்ரேல் அங்கீகரிப்பது போன்று இஸ்ரேலின் இருப்பையும் பலஸ்தீனம் அங்கீகரிக்க வேண்டும். இதுதான் நியாயமான தீர்வு என சொல்லப்படுகிறது.

அதேபோன்று இலங்கையில் இன்று தனிநாட்டு கோரிக்கை இல்லாத போதிலும், ஒரேநாட்டில் தமிழர்களும் சிங்களவர்களும் இணைந்து வாழவேண்டுமானால், மீண்டும் ஒரு யுத்தம் நிகழாமல் இருக்க வேண்டுமானால் பலஸ்தீனத்திற்கு ஒரு நியாயமும் இலங்கைக்கு வேறு வொரு நியாயமும் இருக்க முடியாது.

இந்த விடயத்தினை புரிந்துகொண்டு இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு நியாயமான சுயாட்சியை வழங்கி அங்கீகரிக்க வேண்டும்என்றார். (அ)

## வடக்கில்...

சில இடங்களில் பொதுச்சந்தைகளும் இயங்கின. எரிபொருள் நிலையங்கள் வழமை போன்று திறக்கப்பட்டிருந்தன.

தனியார் பஸ் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. இ.போ.ச. பஸ் சேவைகள் வழமைபோல் இடம்பெற்றன.

பாடசாலைகளில் தவணைப் பரீட்சை இடம்பெற்று வருகின்றமை யால் கல்விச் செயற்பாடுகள் வழமை போல் நடைபெற்றன.

வங்கிகள், நிதி நிறுவனங்கள் திறக்கப்பட்டிருந்தன. பெரும்பாலான இடங்களில் திரையரங்குகளும் திறக்கப்பட்டிருந்தன. அங்கு மக்கள் குவிந்திருந்தனர்.

### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள பிரதான நகரங்களில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன. யாழ்ப்பாண நகரத்தின் வர்த்தக செயற்பாடுகள் முடங்கின.

தனியார் பேருந்து சேவை அனைத்தும் முடங்கின. இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகள் சேவையில் ஈடுபட்டன.

பாடசாலைகள் வழக்கம் போல செயல்பட்டன. அரச அலுவலகங்கள், அத்தியாவசிய சேவைகள் செயல்பட்டதால், மாவட்டம் முழுவதும் மக்கள் நடமாட்டம் காணப்பட்டது.

திருநெல்வேலி சந்தை மூடப்பட்டிருந்ததால் ஒரு பகுதி வர்த்தகர்கள், சந்தைக்கு வெளியில் தமது விவசாய பொருட்களை விற்பனை செய்தனர்.

### கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்டத்தில் வர்த்த நடவடிக்கைகள் முடங்கின. குறுந்தூர சேவைகளில் மாத்திரம் தனியார் பேருந்துகள் ஈடுபட்டன.

அரச பேருந்துகள், ஏனைய அரச திணைக்களங்களின் சேவைகள் வழமை போன்று இடம்பெற்றன.

முச்சக்கர வண்டிகள் சேவையில் ஈடுபட்டன. மருந்தகங்கள், உணவகங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய வர்த்தக செயற்பாடுகள் இடம்பெற்றன. சேவைச் சந்தையும் முழுமையாக முடங்கியது.

### முல்லைத்தீவு

முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதான நகரங்களில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. பாடசாலைகள், அரச அலுவலகங்கள் வழக்கம் போல செயற்பட்டன. தனியார் பேருந்துகள் மட்டுப்படுத்தப்பட்டளவில் இயங்கின. அரச பேருந்துகள் வழக்கம் போல செயற்பட்டன.

நகருக்கு வெளியிலுள்ள பிரதேசங்களில் வழக்கம் போல வர்த்தக செயற்பாடுகள் இடம்பெற்றன.

### வவுனியா, மன்னார்

இரண்டு மாவட்டங்களின் பிரதான நகரங்களில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. வவுனியாவில் ஓமந்தை, புளியங்குளம், கனகராயன் குளம் பகுதிகளில் பாதிக்கதவுகள் திறந்து வர்த்தக நிலையங்கள் இயங்கின. குறுந்தூர தனியார் போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. மன்னாரிலும், இதே நிலவரம்தான் காணப்பட்டது.

### மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் முக்கிய பிரதேசங்களில் உள்ள வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன. உள்ளூரில் வழக்கம் போல வர்த்தக நிலையங்கள் செயற்பட்டன. தனியார் பேருந்து சேவை இடம்பெறவில்லை.

வாழைச்சேனை, படுவான்கரை கல்வி வலயங்களில் மாணவர் வரவு மிகக் குறைவாக இருந்ததால் தவணைப் பரீட்சைகள் நடைபெறவில்லை. மட்டக்களப்பு கல்வி வலயத்தில் 80 வீத மாணவர் வரவு பதிவாகியுள்ளது. அங்கு பரீட்சைகள் நடக்கிறது. பட்டிருப்பு கல்வி வலயத்தில் 45 வீத மாணவர் வரவு பதிவாகியுள்ளது.

### அம்பாறை

அம்பாறை மாவட்டத்தில் கதவடைப்பு தகவலே எட்டவில்லையோ என்ற சந்தேகம் ஏற்படும் விதமான காட்சிகளே பதிவாகியுள்ளன. அம்பாறையில் எந்த பிரதேசத்திலும் கதவடைப்பு இடம்பெறவில்லை. தமிழ் மக்கள் செறிந்து வாழும் பாண்டிருப்பு, பெரிய நீலாவணை பகுதிகளில் கூட கதவடைப்பு கண்டுகொள்ளப்படவில்லை.

### திருகோணமலை

திருகோணமலை மாவட்டத்தில் கதவடைப்பை யாரும் கண்டுகொள்ளவில்லை. நகரம் வழக்கம் போல செயற்பட்டது. நகருக்கு வெளியில் உள்ள தமிழ் பகுதிகளும் வழக்கம் போல செயற்பட்டன

## இலங்கையில்...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இஸ்ரேல்-பலஸ்தீனத்திற்கு இடையிலான இப்பேரானது அரசியல் மோதலாகும்.

இதனை அரசியல்ரீதியாக தான் தீர்க்க முற்பட வேண்டும். உலகில் பல மோல்கள் இடம்பெற்று வருகின்றன. மக்களுக்கிடையிலும், தேசங்களுக்கிடையிலும் பல மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

இலங்கையில் இடம்பெற்றதும் அரசியல் ரீதியான மோதலாகும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அரசியல் மோலுக்கு இராணுவ நடவடிக்கைகள் தீர்வாக அமையாது என்று பாலஸ்தீன இஸ்ரேல் மோதல் தொடர்பாக கருத்து வெளியிட்டிருந்தார்.

ஆனால், அவர் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இந்நாட்டில் அரசியல் மோதல் இடம்பெற்றபோது, இராணுவத்தின் ஊடாகவே தீர்வு வழங்கப்பட்டது. வன்முறைகள் ஒருபோதும் தீர்வாகாது-என்றார். (அ)

## மூன்றாவது...

வழங்கப்பட்டுள்ள அதேநேரம் திருத்தப்பட்ட கட்டணங்கள் அடுத்த வருடம் ஜூன் 30 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு மாதத்தில் 0 முதல் 30 யுனிட்டுகளுக்கு இடையில் பயன்படுத்தும் பயனர்களுக்கு நிலையான கட்டணம் 150 ரூபாயில் இருந்து 180 ரூபாயாகவும் 31 முதல் 60 யுனிட்டுகள் பயன்படுத்துவோருக்கு 300 ரூபாயில் இருந்து 360 ரூபாயாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மாதாந்தம் 61 முதல் 90 யுனிட்டுகளைப் பயன்படுத்துபவர்களுக்கு யுனிட் ஒன்றுக்கு 41 ரூபாய் என்ற அடிப்படையில் 480 ரூபாய் அறவிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

91 முதல் 120 யுனிட் வரை பயன்படுத்துபவர்களுக்கு யுனிட்டுக்கு 59 ரூபாய் விகிதம்1,180 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ள அதேநேரம் மாதத்திற்கு 121 முதல் 180 யுனிட்களை பயன்படுத்துவோருக்கு 1,770 ரூபாயாகவும் 180 யுனிட்டுகளுக்கு மேல் பயன்படுத்துபவர்களுக்கு யுனிட்டுக்கு 89 ரூபாய் விகிதம் 2,360 ரூபாய் அறவிடப்படும் என்றும் இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

வழிபாட்டுத் தலங்கள், ஹோட்டல் துறை, அரச நிறுவனங்கள் மற்றும் கைத்தொழில் துறைகளுக்கான மின் கட்டணத்தை இன்று முதல் அதிகரிக்கவும் இலங்கை மின்சார சபை முன்மொழிந்துள்ளது. (அ)

## இலங்கைக்கு...

வசதிக்கான திட்டத்தின் முதலாவது மீளாய்வை நிறைவு செய்வதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர் மட்ட அதிகாரிகளுக்கும் இலங்கை பிரதிநிதிகளுக்கும் இடையிலான இணக்கப்பாடு எட்டப்பட்ட பின்னர், இந்த இரண்டாம் தவணை கடன் கொடுப்பனவு உறுதி செய்யப்பட் டுள்ளது.

எனினும், இரண்டாம் தவணைக் கொடுப்பனவு விடுவிக்கப்படுவது இரண்டு விடயங்களில் தங்கியுள்ளதாக, சர்வதேச நாணய நிதிய இலங்கை தூதுக் குழுவின் பிரதானி பீற்றர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கடன் வழங்குநர்களுடனான இணக்கப்பாடு மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் இணங்கியுள்ள கொள்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் குறித்த கொடுப்பனவு விடுவிக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

இதனிடையே, உறுதியான வரவு செலவுத் திட்டம் மற்றும் குறைந்த அளவிலான வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை ஆகியவற்றையே சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியம் இன்று முன் னெடுத்த நிகழ்நிலை ஊடக சந்திப்பை மேற்கோள்காட்டி, ரொய்ட்டர்ஸ் சர்வதேச செய்திச் சேவை இதனை தெரிவித்துள்ளது.

## வடபகுதிக்கான...

இதேவேளை, வடபகுதிக்கான ரயில் சேவைகள் அடுத்த மாதம் முதல் மட்டுப்படுத்தப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.(அ)

## மீண்டும்...

அமைப்பை தோற்கடித்ததையடுத்து, இன்று ஜெனிவாவில் போர்க்குற்றச்சாட்டுக்கு முகம் கொடுத்துள்ளோம். இஸ்ரேலுக்கு ஆதரவு தெரிவிக்கும் நாடுகளினாலேயே நாம் குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளோம்.

இந்த நாடுகள் அன்று எம்மை போர் நிறுத்தம் செய்யுமாறு அறிவித்தன. ஆனால், இன்று காஸா மீது போரைத் தொடருமாறு அதே நாடுகள்தான் தெரிவித்து வருகின்றன. இது உண்மையில் வெட்கத்துக்குரிய விடயமாகும்.

வெளிநாடுகளில் வாழும் தமிழ்ப் பிரிவினைவாதிகள், இன்றும் ஈழக்கனவுடன்தான் இருக்கிறார்கள். அந்த நாடுகளில் உள்ள அரசியல்வாதிகளுக்கு இவர்கள் அழுத்தம் கொடுக்கிறார்கள். நாம் பயங்கரவாதத்திற்கு எதிரானவர்கள்.

இந்நிலையில், திவுல்பத்தான கிராமத்திலிருந்து சிங்கள மக்களை வெளியேற்ற வேண்டும் என இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார். அவருக்கு ஒன்றை தெரிவிக்க வேண்டும். இந்த விடயத்தில் தேவையில்லாமல் தலையிடாதீர்கள். யுத்த காலத்தின்போது புலிகளால் தாக்கப்பட்டும் கொல்லப்பட்டும் அந்த கிராமத்திலிருந்து சிங்கள மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

யுத்தம் முடிவுக்கு வந்ததையடுத்துதான், அந்த விவசாயிகள் தங்களின் பூர்வீக நிலங்களில் விவசாய நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். இவர்களின் பெயர் பட்டியல் அனைத்தும் கிராம சேவகரிடம் உள்ளது. இந்த அப்பாவி மக்களை அங்கிருந்து வெளியேற்ற நினைப்பது தவறாகும்.

இது மீண்டும் தமிழ் - சிங்கள முரண்பாட்டுக்கு இடமளிக்கும். ஒவ்வொரு இனத்திற்கும் ஒவ்வொரு பகுதி, நாட்டில் ஒதுக்கப்படவில்லை. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு என்பது புலிகள் அமைப்பின் அரசியல் பிரிவாகும் என்பது அனைவருக்கும் தெரியும். -என்றார்.(அ)

## டயானா...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன பணிப்புரை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த அமைச்சர் டயானா கமகே, “பாராளுமன்ற நூலகத்திற்கு அருகிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பிரித்தியேக மின்தூக்கிக்கு அருகில், என் மீது அத்துமீறலொன்று மேற்கொள்ளப்பட்டது.

சுஜித் பெரேரா என்ற ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரால் நான் தாக்கப்பட்டேன்.

சுமார் ஒன்றரை - இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னர் தான் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதுதொடர்பான விசாரணையொன்றை நான் சபாநாயகரிடம் கோருகிறேன்.

அத்தோடு, இந்த விடயம் தொடர்பாக நான் சட்டநடவடிக்கை யொன்றையும் மேற்கொள்ளவுள்ளேன்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, பெண்கள் தொடர்பாக பாரிய பிரச்னையுள்ளது.

சுஜித் என்ற இந்த நபர், தனது மனைவி மீதும் தாக்குதல் நடத்துபவராகத்தான் இருக்க முடியும். அநாகரீகமான நபர்கள் தான் இவ்வாறு செயற் படுவார்கள்.

நாடாளுமன்றில் ஒரு உறுப்பினர் ஒருவர் பெண் உறுப்பினர் மீது தாக்குதல் நடத்த முடியுமாக இருந்தால், ஐக்கிய மக்கள் சக்தியினர் ஏனைய பெண்கள் தொடர்பாக எதனை பேசுவார்கள்?

இந்தவிடயம் தொடர்பாக நிச்சயமாக விசாரணையொன்று அவசியமாகும். இதற்கெதிராக நான் வீதிக்கு இறங்குவேன்” என அவர் மேலும் தெரிவித்தார்.

ஈழநாடு
Eelanadu

# எரிபொருளுக்கு தட்டுப்பாடில்லை!

## இராஜாங்க அமைச்சர் டி.வீ சானக



கொழும்பு, ஒக்.21

இலங்கையில் மீண்டும் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படுமோ என்ற அச்சம் நிலவியுள்ள நிலையில் அடுத்த ஆண்டு ஜூன் மாதம் வரை எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வீ சானக தெரிவித்தார்.

அத்துடன் நுகர்வோருக்குத் தேவையான எரிபொருளை எவ்வித சிக்கலும் இன்றி வழங்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

காசா பகுதியில் ஏற்பட்ட மோதல் காரணமாக உலக சந்தையில் அனைத்து எரிபொருள் வகையினதும் விலை, கிட்டத்தட்ட 4 சதவீதத்தால் மீண்டும் அதிகரித்துள்ளது.

அடுத்த வருடம் ஜூன் மாதம் வரை அவசியமான எரிபொருளுக்கான கேள்விச் செயற்பாடுகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளன. இலங்கை வரலாற்றில் முதன் முதலாக எமக்கு அவசியமான எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்காக 200 மில்லியன் டொலர்கள் கையிருப்பை நாம் பேணிவருகின்றோம்.

மேலும், எரிபொருள் கொள்வனவுக்காக கடந்த காலங்களில் பெற்றிருந்த கடன்களை மீளச்செலுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், எரிபொருள் சுத்திகரிப்புப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்கத் தேயைான நடவடிக்கைகளையும் நாம் மேற்கொண்டுள்ளோம் - என்றார். (அ)

# ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்ட15,000 சிறுவர்க்கு விசேட போஷாக்கு!

கொழும்பு, ஒக். 21

கடுமையான போசாக்கின்மையால் பாதிக்கப்பட்ட 15,000 சிறார்களுக்கு விசேட போஷாக்குத் திட்டம் ஒன்றை வழங்க ஆரம்பித்துள்ளதாக குடும்ப சுகாதார பணியகம் தெரிவித்துள்ளது.

யுனிசெப்பின் அனுசரணையுடன் இந்த வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக அதன் பணிப்பாளர் கலாநிதி சித்ரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார்.

# மின்கட்டணம் உயர்வு சட்டவிரோதச் செயல்!

## சபையில் சஜித் பிரேதாஸ குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 21

**மின்கட்டணத்தை உயர்த்தியமையானது சட்டவிரோதமான செயற்பாடு என்றும், இவ்விடயம் தொடர்பாக பொது பயன்பாட்டு ஆணைக் குழுவுக்கு சபாநாயகர் அறிவிப்பொன்றை விடுக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று சபையில் வலியுறுத்தினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

31 பில்லியன் ரூபாய் நட்டத்தை சரிசெய்ய, 22 வீதத்தால் மின்கட்டணத்தை உயர்த்துவது தொடர்பாக பொது மக்களின் கருத்துக்கள் கோரப்பட்டிருந்தன. ஆனால், 22 வீதத்தால் அன்றி தற்போது 10 வீதத்தால் மின்கட்டணத்தை உயர்த்த, எந்தவொரு புள்ளிவிவரங்களும் இல்லாமல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது உள்ள கட்டண முறைமையிலேயே மின்சார சபை இலாபமாகத்தான் இயங்கி வருகிறது. எனவே, மின்கட்டணத்தை உயர்த்த வேண்டியத் தேவைக்கிடையாது. அத்தோடு, சட்டவிரோதமாக தான் மின்கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. ஓராண்டுக்கு இரண்டு முறை மட்டும்தான் மின்கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ள முடியும் என்ற நிலைமை இருக்கும்போது, பொது பயன்பாட்டு ஆணைக்குழுவானது 4 தடவைகள் மின்கட்டணத்தை உயர்த்த அனுமதியளித்துள்ளது.

இது பிழையான நடவடிக்கை யாகும்.இவ்வாறு பிழையான முறையில் மின்கட்டணத்தை உயர்த்த நடவடிக்கை எடுத்துள்ள விவகாரம் குறித்து பொது பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு சபாநாயகர் அறிவிப்பொன்றை விடுக்க வேண்டும் - என்றார். (அ)

# முதன் முறையாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளும் ஆதிவாசிகள்

யாழ்ப்பாணம், ஒக். 21

வரலாற்றில் முதன்முறையாக மஹியங்கனையில் வசித்துவரும் ஆதிவாசிகள் யாழ்ப்பாணத்திற்கு இன்று சனிக்கிழமை விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னில அத்தோ தலைமையிலான 60 பேரைக் கொண்ட ஆதிவாசிகள் குழுவினரே இன்றும், நாளையும் யாழ்ப்பாணத்திற்கு சுற்றுப் பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழில் பிரசித்தி பெற்ற இடங்களை பார்வையிட்டு விட்டு மீண்டும் தமது இருப்பிடமான மஹியங்கனைக்கு அவர்கள் செல்லவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



# புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய அதிபர் பணி இடைநிறுத்தப்படுகிறார்!

கொழும்பு, ஒக். 21

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில், நிக்கவெரட்டிய பரீட்சை வலயத்திலுள்ள பரீட்சை நிலையமொன்றில் தோற்றும் மாணவர் ஒருவருக்கான பரீட்சையின் இரண்டாம் வினாத்தாளுக்கு பதில் எழுதிய அதிபரை கல்வி அதிகாரிகள் பணி இடைநிறுத்தம் செய்யவுள்ளனர்.

இதற்கான கடிதத்தை வழங்க நடவடிக்கை எடுப்பதாக கல்வி அதிகாரிகள் தெரிவித்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய பரீட்சை மேற்பார்வையாளர், சம்பவத்துடன் தொடர்புடைய உதவி மேற்பார்வையாளர் மற்றும் சம்பவத்தை நேரில் பார்த்தவர் ஆகியோர் பரீட்சை திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டு, பரீட்சைகள் ஆணையாளரின் தலையீட்டின் பேரில் விசாரணை நடத்தப்பட்டது. இந்த பதில்கள் யாருக்கு எழுதப்பட்டது என்பதை உதவி மேற்பார்வையாளர் குறிப்பாக தெரிவிக்கவில்லை.

இச்சம்பவத்தினால் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் எவருக்கும் பாதிப்பு ஏற்படாதபோதிலும் உதவி அதிபர் தவறை ஏற்றுக்கொண்டுள்ளார்.

இதன்படி, தொலைதூரப் பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றின் அதிபராக கடமையாற்றிய அவரது பணி இடைநிறுத்தப்பட்டு, அதன் பின்னர் மேலதிக விசாரணைகள் நடத்தப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)




# டயனா கமகே கூறியது பொய்!

## காணொளியும் உள்ளது என்கிறார் லக்ஷ்மன் கிரியெல்ல

கொழும்பு, ஒக். 21

இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவினால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு அடிப்படையற்றது என எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாம் சபையில் இல்லாதபோது, டயனா கமகேவினால், எமது உறுப்பினர் மீது குற்றச்சாட்டொன்று முன்வைக்கப்பட்டது. இதுதொடர்பாக நாம் சபாநாயகரை சந்தித்தோம்.

காணொளியையும் காண்பித்துள்ளோம். இதன்போது, யார் அநாகரீகமாக நடந்துக் கொண்டது மற்றும் யார் கைப்பையினால் தாக்குதல் நடத்தியது என்பதை சபாநாயகரிடம் தெளிவாகக் காண்பித்துள்ளோம்.

இதுதொடர்பாக விசாரணை நடத்துமாறும் கூறியுள்ளோம். இந்த குற்றச்சாட்டை மறுக்கிறோம். நாடாளுமன்றதிற்கு உள்ளே நடந்த பிரச்சினையென்பதால், சபாநாயகர் இதற்கான தீர்வினை வழங்க வேண்டும் - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# வலைப்பந்தாட்டப் போட்டிகளில் வென்ற வீர வீராங்கனைகளை பாராட்டும் நிகழ்வு





யாழ்ப்பானம், ஒக். 21

இலங்கை அரசசேவை வலைப்பந்தாட்ட சங்கத்தால் பதுளை மாவட்டம் பண்டாரவளையில் நடாத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்ட சுழற்சி முறை, விலகல் முறை போட்டியில் யாழ்ப்பாண மாவட்ட செயலக அணி சார்பாக பங்குபற்றி 05 போட்டிகளில் வெற்றி பெற்ற வீர வீராங்கனைகளுக்கான மெச்சுரை வழங்கும் நிகழ்வு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் மாவட்ட செயலக அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு வீரவீராங்கனைகளுக்கான வாழ்த்துக்களை தெரிவித்ததுடன், மெச்சுரைகளையும் வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள் , உதவி பிரதேச செயலாளர்கள் , மாவட்ட, பிரதேச செயலக பயிற்றுவிப்பாளர்கள், வெற்றீட்டிய வீர வீராங்கனைகளும் கலந்து கொண்டனர்.

(அ)

# கபில்தேவின் 36 வருட சாதனை முறியடிப்பு





இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் சகலதுறை வீரர் கபில் தேவின் 36 வருட உலக சாதனையை நெதர்லாந்து கிரிக்கெட் அணித்தலைவர் முறியடித்துள்ளார்.

தென்னாபிரிக்க அணிக்கு எதிராக நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்டியிலேயே அவர் இந்த சாதனையை படைத்துள்ளார்.

நியூசிலாந்துக்கு எதிராக 36 வருடங்களுக்கு முன், 1987ஆம் ஆண்டில் நடைபெற்ற உலகக் கிண்ண போட்டியில் பெங்களூர் மைதானத்தில் 7ஆவது இடத்தில் களமிறங்கிய அணித்தலைவர் கபில் தேவ் 58 ஓட்டங்களை பெற்றார்.

இதுவே 7 ஆவது இடத்தில் களமிறங்கிய ஒருவர் பெற்ற அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையாகும்.

இந்த நிலையில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டியில் 7 ஆவது இடத்தில் களமிறங்கிய நெதர்லாந்து அணித் தலைவர் ஸ்கொட் எட்வேட்ஸ் அதிரடியாக 10 பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட, 69 பந்துகளில் 78 ஓட்டங்களை குவித்துள்ளார்.

இதன்மூலம், உலகக் கோப்பை வரலாற்றில் 7ஆவது இடத்தில் களமிறங்கி, அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையை பதிவு செய்த அணித்தலைவர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

தென்னாபிரிக்க அணிக்கு எதிராக நெதர்லாந்து அணி அபாரமாக விளையாடி 38 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# பலஸ்தீனத்தை ஆதரித்து பதிவிட்ட நெதர்லாந்து வீரரை நீக்கிய ஜேர்மனி!




பலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக சமூக வலைத்தளங்களில் பதிவிட்ட நெதர்லாந்து கால்பந்து வீரர் அன்வர் எல்-காசியை, ஜேர்மன் கழகமான மெய்ன்ஸ் 05 இடைநீக்கம் செய்துள்ளது.

தற்போது, மெய்ன்ஸ் 05 அணியில் அன்வர் எல்-காசி ஆடி வருகிறார்.

“அவர் கழகத்தால் ஏற்றுக்கொள்ள முடியாதது” என்று கருதிய விதமாக செயற்பட்டதாகவும், அது “கழகத்தின் மதிப்புகளுடன் ஒத்துப்போகவில்லை” என்றும் கூறியுள்ளது.

மொராக்கோ வம்சாவளியைச் சேர்ந்த எல்-காசி, நெதர்லாந்தை இரண்டு முறை பிரதிநிதித்துவப்படுத்தினார். செப்ரெம்பர் இறுதியில் மெய்ன்ஸ் 05 கிளப்புடன் கையெழுத்திட்டார்.

இதற்கு முன்பு நெதர்லாந்தின் முன்னணி கழகங்களுக்காக அவர் விளையாடியுள்ளார்.

எல் காசி இன்ஸ்டாகிராமில் முதலில் ஒரு இடுகையைப் பகிர்ந்து கொண்டார். அதன் கடைசி பகுதி “நதி முதல் கடல் வரை, பலஸ்தீனம் சுதந்திரமாக இருக்கும்” என குறிப்பிடப்பட்டிருந்தது. பலஸ்தீனம் ஜோர்தானில் இருந்து மத்திய தரைக் கடல் வரை நீடிக்கவேண்டும் என்பதே இதன் பொருள். இது ஒரு வகையில் இஸ்ரேலின் இருப்புக்கான உரிமையை மறுக்கிறது. அந்த இடுகை பின்னர் நீக்கப்பட்டது.

ஜேர்மனியில் உள்ள பலஸ்தீனியர்களும் அவர்களது ஆதரவாளர்களும் பலஸ்தீன சார்பு வெளிப்பாட்டைக் கட்டுப்படுத்துவதாக புகார் அளித்துள்ளனர். மேலும் பலஸ்தீன ஆதரவு போராட்டங்கள் நடத்த அனுமதிக்கப்படவில்லை.

(அ)

# ரொனால்டோ பலஸ்தீனதற்கு ஆதரவா?




சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் சட்டங்களை மீறி இஸ்ரேலின் வான்வழித் தாக்குதல்கள் மற்றும் முற்றுகைகளால் பாதிக்கப்படும் பலஸ்தீன குழந்தைகளுக்கு போர்த்துகல் கால்பந்து அணியின் நட்டசத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ தனது ஆதரவை அறிவித்துள்ளார் என செய்தி வெளியாகியுள்ளது.

இது குறித்த காணொளி சமூக வலைதளங்களில் பரவலாகப் பரவி வருகிறது. இந்த காணொளியை பகிர்ந்து அவருக்கு பலரும் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

“நீங்கள் மிகவும் கஷ்டப்படுகிறீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். நான் ஒரு பிரபலமான வீரர் ஆனால் நீங்கள் தான் உண்மையான ஹீரோக்கள். நம்பிக்கையை இழக்கக்கூடாது. உலகம் உங்களுடன் இருக்கிறது.

நான் உங்களுடன் இருக்கிறேன்’என காணொளியில் ரொனால்டோ கூறியுள்ளார்.

காஸா மற்றும் பலஸ்தீனத்தின் அப்பாவி குழந்தைகளுக்காக ரொனால்டோ பேசுகிறார் என்ற குறிப்புடன் பலர் இந்த காணொளியை பகிர்ந்து வருகின்றனர்.

ஆனால் ரொனால்டோவின் பெயரில் பரவும் இந்த காணொளி உண்மையில் 2016 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

அப்போது சிரியாவில் உள்நாட்டுப் போரின் போது பாதிக்கப்பட்டிருந்த குழந்தைகளுக்கா அவர் பேசிய காணொளி தற்போது தவறாகப் பரப்பப்பட்டு வருகிறது.

கிறிஸ்டியானோ இந்த காணொளியை எக்ஸ் (ருவிட்டர்) இல் ‘சிரியாவில் மோதலில் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ‘ஒரு நம்பிக்கை செய்தி’ என்ற தலைப்புடன் பகிர்ந்திருந்தார்.

(அ)

# சீனாவின் புதிய பட்டுப்பாதை: உலகிற்கே சீனா தலைமை ஏற்க வழிவகுக்குமா?

டெஸ்ஸா வாங்




உலகத்துடன் நெருங்கி வரும் தனது முயற்சிகளில் மிகப்பெரிய திட்டமான புதிய பட்டுப்பாதை என்று வர்ணிக்கப்படும் 'பெல்ட் அண்டு ரோடு இனிஷியேட்டிவ்' (பி.ஆர்.ஐ) திட்டத்தின் 10-வது ஆண்டை சீனா வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறது.

இத்திட்டத்தின் 10-வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் மாநாட்டில் ரஷ்ய அதிபர் விளாதிமிர் புடின், ஹங்கேரிய பிரதமர் விக்டர் ஓர்பன் தவிர தலிபான் அரசாங்கமும் இதில் கலந்துகொண்டுள்ளனர். சீன ஊடகங்களில் இத்திட்டத்தின் சாதனைகளைப் பற்றிய செய்திகள் நிரம்பி வழிகின்றன. சீன அரசுத் தொலைக்காட்சியில் இதுகுறித்து ஆறு பாகங்கள் கொண்ட ஆவணப்படம் தயாரித்திருக்கிறது.

சீன அதிபர் ஷி ஜின்பிங்கின் முக்கியமான கொள்கையான பெல்ட் அண்டு ரோடு இனிஷியேட்டிவ், முதலீடுகள் மற்றும் உள்கட்டமைப்பு திட்டங்கள் மூலம் சீனாவை உலகத்துடன் நெருக்கமாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஏறக்குறைய 150 நாடுகளில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்குப் பெருந்தொகை யான பணத்தின் மூலம், உலகை மாற்றிவிட்டதாக சீனா கூறுகிறது. அதில் தவறில்லை.

ஆனால், பெய்ஜிங்கின் மாபெரும் சூதாட்டம் என்று பார்க்கப்படும் இத்திட்டம், எதிர் பார்த்த விதத்தில் முழு மையாகச் செல்லவில்லை. இத்தனை செலவு செய்ததற் கான பலனளித்ததா இத்திட்டம்?

**பட்ஜெட் எவ்வளவு? எதற்காக செலவு செய்யப்பட்டது?**

2013-ஆம் ஆண்டு புதிய பட்டுப்பாதை எனப்படும் பெல்ட் அண்டு ரோடு இனிஷி யேட்டிவ் அறிவிக்கப்பட்டது. அப்போதிருந்து இது பண்டைய உலகின் பட்டுப் பாதையுடன் ஒப்பிட்டு பேசப்பட்டு வருகிறது. சீனா மாபெரும் லட்சியங்களைக் கொண்டிருந்தது என்பது அப்போதே தெளிவானது.

'பெல்ட்' என்பது மத்திய ஆசியா வழியாகவும், தெற்காசியா மற்றும் தென்கிழக்கு ஆசியா வழியாகவும் சீனாவை ஐரோப்பாவுடன் இணைக்கும் தரைவழிப் பாதைகளைக் குறிக்கிறது. அதே சமயம் 'ரோடு' என்பது ஆசியா வழியாக ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பாவிலிருந்து பெரிய துறைமுகங்களுடன் சீனாவை இணைக்கும் கடல் வலையமைப்பைக் குறிக்கிறது.

இது வெளிநாடுகளில் உள்கட்டமைப்பில் செய்யப்பட்ட பெரும் அரசு முதலீட்டுடன் தொடங்கியது. இத் திட்டத்தின் மதிப்பீடான 1 லட்சம் கோடி அமெரிக்க டாலர் பெரும்பாலான நிதி ஆற்றல் மற்றும் போக்குவரத்துத் திட்டங்களான மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் ரயில் சேவைகள் போன்றவற்றில் செலவிடப்பட்டுள்ளது. இவ்வளவு பெரிய நிதியை கொட்டி சீனா 10 ஆண்டுகளுக்கு முன்பு சீனா தொடங்கிய திட்டம் அதன் இலக்குகளை எட்டியுள்ளதா? உலகின் தலைமைப் பீடத்தை பிடிக்க சீனாவால் முடியுமா?

**சீனாவுக்கு இது பொருளாதார வெற்றியா?**

சீனா இத்திட்டத்தைப் பொருளாதார வெற்றி என்று கூறியது. இந்த முதலீடுகள் வளர்ச்சியைத் தூண்டும் என்று மற்ற நாடுகளுக்குச் சொன்னது. அதே சமயம் உள்நாட்டு மக்களிடம், இத்திட்டம் சீன நிறுவனங்களுக்கு உதவும் என்றும், பொருளாதாரத்தை உயர்த்தும் என்றும், நாட்டின் நற்பெயரை மேம்படுத்தும் என்றும் கூறியது.

ஆனால், சீன பணமான யுவானை சர்வதேசமயமாக்குதல் மற்றும் சீன நிறுவனங்களின் தேவைக்கதிகமான உற்பத்தியைச் சமாளிப்பது ஆகிய இலக்குகளை அடைவதில் இத்திட்டம் எதிர்பார்த்த வெற்றியைப் பெற வில்லை.

ஆனால் சீனா வர்த்தகத்தில் பெரும் பொருளாதார லாபத்தைப் பெற்றது. பல ஒப்பந்தங்கள் எண்ணெய், எரிவாயு மற்றும் கனிமங்கள் போன்ற கூடுதல் வளங்களைப் பயன்படுத்துவதை இலக்காகக்கின. குறிப்பாக இத்திட்டத்தின் கவனம் ஆப்பிரிக்கா, தென்அமெரிக்கா மற்றும் மத்திய கிழக்கு ஆகியவற்றை உள்ளடக்கியது. கடந்த பத்தாண்டுகளில் சீனா மற்றும் இத்திட்டத்தின் பிற நாடுகளுக்கிடையே சுமார் 1,580 லட்சம் கோடி ரூபாய் (இந்திய ரூபாய்)மதிப்பிலான பொருட்கள் வர்த் தகம் செய்யப்பட்டன.


**இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் என்ன?**

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் சீன அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களை வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்வதும், சீனாவுக்குத் தேவையான வளங்கள் உள்ளே வருவதை எளிதாக்குவதும் ஆகும் என்று சீனா குறித்த ஆய்வுகளுக்கான மெர்கேட்டர் நிறுவனத்தின் மூத்த ஆய்வாளர் ஜேக்கப் குந்தர் கூறினார். "இது தாராளவாத வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு மாற்றாக ஏற்றுமதிச் சந்தைகளை விரிவுபடுத்துவது மற்றும் மேம்படுத்துவது பற்றியது," என்கிறார் அவர்.

சீனா, மேற்கு நாடுகளுடனும் அதன் நட்பு நாடுகளுடனும் அதிக பதற்றங்களை எதிர்கொள்ளும் நேரத்தில் இது முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

உதாரணமாக சோயாபீன்ஸை எடுத்துக் கொள்ளுங்கள். உலகின் மிகப்பெரிய இறக்குமதியாளராக இருக்கும் சீனா, பொருட்களைப் பெறுவதற்கு அமெரிக்காவையே பெரிதும் நம்பியிருந்தது. ஆனால் இறக்குமதிக் கட்டணம் தொடர்பாக அமெரிக்காவுடன் ஏற்பட்ட ஒரு மோதலைத் தொடர்ந்து சீனா தென் அமெரிக்காவை நோக்கித் திரும்பியது. குறிப்பாக பிரேசில். தற்போது பெல்ட் அண்டு ரோடு இனிஷியேட்டிவ் திட்டத்தின் மூலம் தென் அமெரிக்காவிலேயே அதிக நிதியுதவியை பெறும் நாடாக பிரேசில் இருக்கிறது.







அதேபோல, மத்திய ஆசியா மற்றும் ரஷ்யாவிலிருந்து வரும் எரிவாயுக் குழாய்கள், மற்றும் ரஷ்யா, ஈராக், பிரேசில் மற்றும் ஓமன் ஆகிய நாடுகளிலிருந்து எண்ணெய் இறக்குமதிகள், ஜப்பான், தென் கொரியா மற்றும் அமெரிக்கா மீதான சீனாவின் சார்பைக் குறைத்துள்ளது என்று சர்வதேச மூலோ பாய ஆய்வுகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

**மாபெரும் கடன் வலை, உள்நாடடுக் கடன் சிக்கல்**

புதிய பட்டுப்பாதை எனப்படுகிற பெல்ட் அண்டு ரோடு இனிஷியேட்டிவ் மூலம் பல குறைந்த அல்லது நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுக்கு கடன் வழங்கும் முதல் நாடாக மாறிய சீனா, இப் போது உலகின் மிகப்பெரிய சர்வதேச கடன் வழங் குநராக உள்ளது.

ஆனால் சீனா உலக நாடுகளுக்கு வழங்கும் கடனின் உண்மையான அளவு என்னவென்று தெரிய வில்லை. சீனாவின் பொது மற்றும் தனியார் கடன் வழங்குபவர்களால் வழங்கப்பட்ட பல கடன்கள் இரகசியமாக மறைக் கப்பட்டுள் ளன.

இப்போது, இலங்கை, மாலத்தீவு, லாவோஸ், கென்யா எனப் பல நாடுகள் சீனாவின் பெல்ட் அண்டு ரோடு இனிஷியேட்டிவ் திட்டத்தின் மூலம் பெற்ற கடன் சுமையால் போராடி வருகின்றன. இது சீன அரசுக்கு கடும் நெருக்கடியைக் கொடுத்திருக்கிறது.

ஒரு ரியல் எஸ்டேட் நெருக்கடி மற்றும் உள்ளாட்சி அரசாங்கங்கள் அதிகளவில் வாங்கிய கடன் ஏற்கனவே சீனாவிற்குள் ஒரு பெரும் கடன் சிக்கலை உருவாக்கியுள் ளது. இதுவும் பல லட்சம் கோடி ரூபாய்களாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. கோவிட் பெருந்தொற் றுக்குப் பிந்தைய மந்தமான பொருளாதாரம் மற்றும் இளைஞர்களின் வேலையின்மை போன் றவை இந்த சிக் கலை மேலும் மோசமாக்குகின்றன.

சீனா பெல்ட் அண்டு ரோடு இனிஷியேட் டிவ் கடன் களை மறுசீரமைத்துள்ளது. காலக் கெடுவை நீட்டித்தது மற்றும் கடன் வாங்குப வர்கள் சரியான நேரத்தில் பணம் செலுத்த உதவுவதற்காக சுமார் 20,000 லட்சம் கோடி 20 லட்சம் கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது. ஆனால் கடனை ரத்து செய்ய மறுத்துவிட்டது.

**சீனா கடன் வலை ராஜதந்திரத்தில் ஈடுபடுகிறதா?**

பசுமை நிதி மற்றும் மேம்பாட்டு மையத்தின் நிறுவன இயக்குநர் கிறிஸ்டோப் நெடோபில், சீனாவின் உள்நாட்டுப் பொருளாதாரப் பிரச்னைகள் முழுமையாகத் தீர்க்கப்படாத நிலையில், அது ஒரே நேரத்தில் வெளி நாடுகளில் கடன் தள்ளுபடியில் ஈடுபடுவதோ, அதை ஊக்குவிப் பதோ உள்நாட்டில் பெரும் அரசியல் சவாலாக இருக்கும், என்கிறார். இந்நிறுவனம் சீனாவின் பெல்ட் அண்டு ரோடு இனிஷியேட்டிவ் செல வினங்களைக் கண் காணிக்கிறது.

இந்தச் சிக்கல் பெய்ஜிங்கின் நற்பெயரைக் கெடுத்துவிட்டது. விலையுயர்ந்த திட்டங்களில் கையெழுத்திட ஏழை நாடுகளை கவர்ந்திழுப்பதன் மூலம் சீனா 'கடன் வலை இராஜதந்திரத்தில்' ஈடுபடுவதாகச் சில விமர்சகர்கள் குற்றம் சாட்டுகின்றனர். இதனால் பெய்ஜிங் இறுதியில் பிணையமாக வைக்கப்பட்ட சொத்துகளின் கட்டுப் பாட்டை பெற முடியும் என்று அவர்கள் கூறுகின்றனர். இலங்கையின் சர்ச்சைக்குரிய ஹம்பாந்தோட்டை துறை முகத் திட்டம் தொடர்பாக அமெரிக்காவின் குற்றச்சாட்டு இதுவாகும். ஆனால், பல ஆய்வாளர்கள் இக்குற்றச்சாட் டுக்கான ஆதாரங்கள் இல்லை என்று வாதிடு கின்றனர்.

இருப்பினும் பெய்ஜிங் இந்த பெல்ட் அண்டு ரோடு இனிஷியேட்டிவ் திட்டத்தைப் பயன்படுத்தி மற்ற நாடுகளின் இறையாண்மையைக் குறைப்பதற்கு முயல்கிறது என்ற அச்சத்தை அதிகப்படுத்தியுள்ளது. ●

# இஸ்ரேலின் சிதைந்த ஈகோவும் நெதன்யாகுவின் இழந்த செல்வாக்கும்:

# தொடரும் காஸா தாக்குதலின் பின்னணி!

காஸா நகர மருத்துவமனையின் மீது இஸ்ரேல் படை விமானங்கள் குண்டுகளை வீசியதில் ஏறத்தாழ 500 பேர் உயிரிழந்திருக்கின்றனர்.

காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்களில் காயமுற்றவர்களும் மற்றவர்களும் அடைக்கலமாகத் திரண்டிருக்கும் ஒரு மருத்துவமனையின் மீது கண்மூடித்தனமாக இஸ்ரேல் விமானங்கள் குண்டுகளை வீசியிருக்கின்றன.

அல் அஹ்லி மருத்துவமனை வளாகத்தில் தீப்பற்றியெரிகிற, கண்ணாடிகள் நொறுங்கிக் கிடக்கிற, மனித உடல்களின் பாகங்கள் சிதறிக் கிடக்கிற புகைப்படங்கள் வெளியாகியிருக்கின்றன.

ஆனால், இதுபற்றிய தகவல்கள் தெரியவில்லை என்றும் இஸ்ரேலியே விமானத் தாக்குதல்தானா? என்றும் சொல்லத் தெரியவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார் இஸ்ரேலின் ராணுவ செய்தித் தொடர்பாளர் டேனியல் ஹகாரி.

காஸாவில் மின்சாரம் இல்லை, தண்ணீர் இல்லை, உணவு இல்லை. வீடுவாசல்களை விட்டு வெளியேறி அகதிகளாக மக்கள் தங்கியுள்ள முகாம்களும் குண்டு வீசித் தாக்கப்படுகின்றன.

ஆனால், ஹமாஸ் மறைவிடங்களையும் கட்டமைப்புகளையும்தான் தாக்குகிறோம் என்று இஸ்ரேலிய ராணுவம் தெரிவித்துக் கொண்டிருக்கிறது. உலகமும் பார்த்துக் கொண்டிருக்கிறது.

ஹமாஸ் படையினர் தங்கியிருக்கிறார்கள் என்ற ஒரே காரணத்தைக் கூறிக்கொண்டு, காஸாவின் பொது மக்கள் மீது இவ்வளவு பெரிய தாக்குதலை இஸ்ரேல் நடத்திக் கொண்டிருப்பதற்கு அரசியல்ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் முக்கியமான காரணங்கள் இருக்கின்றன.

இஸ்ரேலுக்குள் புகுந்து ஹமாஸ் படையினர் நடத்திய தாக்குதலை இன்னமும் இஸ்ரேலிய அரசு அமைப்புகளாலும் ராணுவ, உளவு அமைப்புகளாலும் நினைத்தும் பார்க்க முடியவில்லை. கெட்ட கனவாக இதை மறக்கவும் முடியாது.



அல் ஷிபா மருத்துவமனையில் கிடத்தப்பட்டுள்ள பாலஸ்தீனர்களின் சடலங்கள்



உலகின் மிகத் திறமையானவை என்பதாக, இஸ்ரேலைப் பற்றியும் அதன் ராணுவ, உளவு அமைப்புகளைப் பற்றியும் இவ்வளவு காலம் உலகம் கொண்டிருந்த அனைத்து நம்பிக்கைகளையும் அண்மையில் ஹமாஸ் நடத்திய திடீர் தாக்குதலும் பிணைக் கைதிகளைப் பிடித்துச் சென்றதும் உடைத்தெறிந்திருக்கிறது.

இஸ்ரேலில் முற்றிலும் செல்வாக்கு இழந்துபோய், எதிர்க்கட்சிகளின் கடும் விமர்சனங்களுக்கும் மக்களின் எதிர்ப்புக்கும் உள்ளாகி, எப்போது வெளியேறப் போகிறார் என்ற நிலையில்தான் இருந்தார் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு.

இதையும் படிக்க.. இஸ்ரேல் மீதான ஹமாஸ் தாக்குதலும் காஸா போரும்! விரிவும் ஆழமும் கொண்ட அலசல்

தேச பக்தியின் பெயரால் காஸா மக்கள் மீதான இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து நடத்தி, பெரும் வெற்றி பெற்றதாகக் காட்டிக் கொள்வதன் மூலம் இஸ்ரேல் வென்றதாகவும் கூடவே தானும் வென்றதாகத் தம்மை முன்னிறுத்திக் கொள்ளும் அரிய வாய்ப்பை நெதன்யாகுவுக்கு ஹமாஸ் அமைப்பினர் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள்.

உத்தியிலும் உளவுத் திறனிலும், ராணுவரீதியாகவும் என எல்லாவகையிலும் இஸ்ரேல் ராணுவம் தோற்றுப் போய்விட்டிருக்கிறது என்ற ஓய்வுபெற்ற இந்திய வெளியுறவுத் துறை அலுவலர் தல்மிஸ் அகமதுவின் அவதானிப்பு குறிப்பிடத்தக்கது.

உருப்படியான பாதுகாப்பு ஏற்பாடுகள் எதுவும் இல்லாமல் இஸ்ரேலின் எல்லைப் பகுதியில் காஸாவுக்கு மிக அருகில் இசை விழா நடத்தப்பட்டிருக்கிறது. மேற்குக் கரையில் பாலஸ்தீனர்கள் தாக்கப்படுவதும் இந்த ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் புனிதமான அல் அக்ஸா மசூதி அவமரியாதை செய்யப்படுவதும் தொடர்ச்சியாக நடந்துகொண்டிருக்கும் நிலையில், ஹமாஸ் அமைப்பினர் திருப்பித் தாக்குவார்கள் என்று இஸ்ரேல் எதிர்பார்த்திருக்க வேண்டாமா?

தங்கள் பகுதிக்குள் நுழைந்து பெரும் தாக்குதலை நடத்திவிட்டுச் சென்றுவிட்ட ஹமாஸினரை விட்டுவிட்டு, சண்டையைத் தொடங்குவதற்கு முன்னரே முற்றிலுமாகத் தோற்றுப் போய்விட்ட இஸ்ரேல், கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பதைப் போல, தற்போது காஸாவிலுள்ள ஒன்றுமறியா மக்கள் மீது குண்டுகளை வீசிக்கொண்டிருக்கிறது. தாக்குதல் நடத்திய ஹமாஸ் அமைப்பினரை ஒழிப்பதாகச் சொல்லிக் கொண்டு வான்வழியும் தரைவழியும் குண்டுகளை வீசி மக்களைக் கொன்று கொண்டிருக்கிறது இஸ்ரேல்.

அல் ஷிபா மருத்துவமனையில் கிடத்தப்பட்டுள்ள பாலஸ்தீனர்களின் சடலங்கள்.

இத்தகைய தாக்குதல்களால் மட்டுமே ஹமாஸ் படையினரை ஒழித்துவிட முடியுமா? முடியாது என்று இஸ்ரேலுக்கும் தெரியும், நெதன்யாகுவுக்கும் தெரியும். ஆனால், இந்தத் தாக்குதலை நடத்தி, ஆபத்து ஆபத்து என சொந்த நாட்டு மக்களையும் பதற்றத்தில் வைத்திருக்க வேண்டிய கட்டாயம் நேரிட்டிருக்கிறது. மக்கள் மத்தியில் இழந்துவிட்ட நம்பிக்கையைப் பெறக் கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பை சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் இஸ்ரேலும் நெதன்யாகுவும் (அமெரிக்க அதிபர் ஜோ பைடனும் வந்துவிட்டார்).

இதையும் படிக்க.. ஹமாஸ்: யார்? என்ன விரும்புகிறது? தாக்குதல் ஏன்?

யார் யாரோ பயன்பெறுவதற்காக, ஹமாஸ் ஒழிப்பு என்ற பெயரில், ஒட்டுமொத்தமாக ஒன்றுமறியா மக்களை அழித்தொழித்து, அகதி முகாம்களுக்குத் துரத்தி, காஸாவையும் பாழடைந்த பிரதேசமாக மாற்றும் நடவடிக்கையைத்தான்



வெவ்வேறு பெயர்களில் செய்துகொண்டிருக்கிறது இஸ்ரேல்.

இவ்வளவு மரண ஓலம் கேட்டுக்கொண்டிருக்கும் நிலையில், மருத்துவமனையின் மீதே குண்டுகள் வீசப்பட்டு நூற்றுக் கணக்கில் மக்கள் கொல்லப்படும் நிலையில், ஏனோ உலகத் தலைவர்கள் எல்லாரும் பேசாமல் இருக்கின்றனர்.

கேட்பதற்கு யாருமில்லாத நிலையில் ஐக்கிய நாடுகளின் அவையின் குரல் ஈனஸ்வரத்தில் ஒலித்துக் கொண்டிருக்க, இவ்வளவு பெரிய மனிதப் படுகொலை நடந்து கொண்டிருக்கும்போது ஒட்டுமொத்த உலகமும் கள்ள மௌனம் சாதித்துக் கொண்டிருக்கிறது!

அல்லற்பட்டு ஆற்றாது அழும் மக்களின் கண்ணீர் உலக வரைபடத்தில் வெள்ளமாகப் பெருக்கெடுத்தோடிக் கொண்டிருக்கிறது! ●

# அம்பாறையில் இயல்பு நிலை

## ஹர்த்தால் பிசுபிசுப்பு




நிந்தவூர், ஒக். 21

வடக்கு, கிழக்கில் நேற்று வெள்ளிக்கிழமை பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும் அம்பாறை மாவட்டத்தின் பெரும்பாலான பிரதேசங்கள் வழக்கமான இயல்பு நிலையிலேயே காணப்பட்டன.

பல தமிழ், முஸ்லிம் பிரதேசங்களிலும் ஹர்த்தால் பற்றிய எவ்வித அக்கறையுமின்றி பிசு, பிசுத்த நிலையில் மக்கள் அன்றாட செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு நீதவான் ரி. சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைக் கண்டித்தும், தமிழ் மக்கள் மீதான அழுத்தங்கள் மற்றும் நெருக்கடிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இந்த ஹர்த்தாலுக்கான அழைப்பு தமிழ்த் தேசியக் கட்சிகளால் விடுக்கப்பட்டிருந்தது.

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்த ஹர்த்தாலுக்கு ஆதரவளிப்பதாகவும், முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.ரி.ஹஸனலியைச் செயலாளர் நாயகமாகக் கொண்ட ஐக்கிய சமாதானக் கூட்மைப்பு ஹர்த்தாலுக்கு ஆதரவும் தெரிவித்து அழைப்பு விடுத்த நிலையிலும் அம்பாறை மாவட்டத்தின் எந்த முஸ்லிம் பிரதேசத்திலும் ஹர்த்தாலுக்கு ஆதரவளிக்கப்படவில்லை.

குறிப்பாக அம்பாறை மாவட்டத்தின் முக்கிய மாநகரமான கல்முனையின் முக்கிய பொதுச் சந்தை உட்பட பஸார் பகுதியின் வர்த்தக நிலையங்கள் பலவும் திறந்திருந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன.

வழக்கமாக வெள்ளிக்கிழமைகளில் மூடப் ஸ்ரீபடும் வர்த்தக நிலைங்கள் மூடப்பட்டிருந்த நிலையில், மாநகரின் தமிழ், முஸ்லிம்களுக்கான பலவர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தன.

அதேபோல் கல்முனை மாநகரிலுள்ள அரச அலுவலகங்கள், வங்கிள் என்பனவும், பாடசாலைகளும் போக்குவரத்து சேவைகளும் வழமைபோல் இயங்கின.

ஹர்த்தாலுக்கு கல்முனை பொதுச் சந்தை வர்த்தக சங்கம் ஆதரவளிக்காது எனவும், அது பற்றித்தமக்குத் தெரியாது எனவும் முன்கூட்டியே சங்க முக்கியஸ்தர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்த மாவட்டத்தின் முக்கிய தமிழ்ப் பிரதேசங்களான காரைதீவு, பாண்டிருப்பு மற்றும் முஸ்லிம் பிரதேசங்களான நிந்தவூர், மாளிகைக்காடு, சாய்ந்தமருது, கல்முனைக்குடி போன்ற பல பிரதேசங்களிலும் ஹர்த்தாலின்றி வழமையான இயல்பு நிலையே காணப்பட்டது. (அ-6)

## இலைக்கஞ்சி வழங்கும் நிகழ்வு

மட்டக்களப்பு, ஒக். 21

சர்வதேச வறுமை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு கோறளைப் பற்று மத்தி பிரதேச செயலகப்பிரிவின் புனானை கிழக்கு 211 பி பிரிவில் இலைக்கஞ்சி வழங்கும் நிகழ்வொன்று இடம்பெற்றுள்ளது.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.எம்.எச்.முகம்மட் அவர்களின் நெறிப்படுத்தலில் அல் ஹம்றா முன்பள்ளி மாணவர்களுக்கான இலைக்கஞ்சி வழங்கும் நிகழ்வு சி.பி.ஓ அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் வங்கி கட்டுப்பாட்டுச் சபை தலைவர் ஏ.பி.காதர் முகம்மட், சி.பி.ஓ தலைவர் எஸ்.ரீ.பைறூஸ், முன்பள்ளி ஆசிரியை, சி.பி.ஓ நிர்வாக உறுப்பிர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சிப் பிரிவின் பணிப்பாளராக நௌபீஸ்



திருமலை, ஒக். 21

கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி பிரிவின் மாகாணப் பணிப்பாளராக என்.எம்.நௌபீஸ் நேற்று தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கடந்த 5 ஆண்டு காலமாக கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள மாகாணப் பணிப்பாளராக செயற்பட்டு வந்த இந்நிலையில், கிழக்கு மாகாண அளுநர் செந்தில் தொண்டமானினால் வழங்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி பிரிவின் மாகாணப் பணிப்பாளராக தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

